வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk மலர் : 04 04.11.2023 சனிக்கிழமை இதழ் : 328 பக்கங்கள் : 12




## யாழ்.போதனா வைத்தியசாலை முன் மருத்துவர் சங்கம் நேற்று போராட்டம்!

### பிரச்னைகளுக்கு தீர்வு காண வலியுறுத்தி



யாழ்ப்பாணம், நவ. 04
வடக்கு மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் அரசு வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் நேற்று காலை 8 மணி முதல் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த பணிப்புறக்கணிப்பு இன்று சனிக்கிழமை காலை 8 மணி வரை முன்னெடுக்கப்படும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த போராட்டத்தால் வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து அரச 11

## போராட்டம் இடைநிறுத்தம்

கொழும்பு, நவ. 04
அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தால் நேற்று முன் தினம் ஆரம்பிக்கப்பட்ட மாகாண மட்டத்திலான வேலைநிறுத்தங்களை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அளுத்கே தெரிவித்தார்.

தமது பிரச்னைகள் தொடர்பில் அரசாங்கத்திடம் இருந்து கிடைத்த 11

## நல்லூர் கந்தனை வழிபட்ட நிர்மலா



யாழ்ப்பாணம், நவ. 04
இந்தியாவின் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் நேற்று நல்லூர் கந்தசுவாமி கோயிலில் வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இதன்போது இந்திய தூதுவர் கோபால் பாக்லே இலங்கை வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அ. சிவபாலசுந்தரன், யாழ் மாநகர சபை ஆணையாளர் இ. த. ஜெயசீலன் உள்ளிட்ட பலரும் உடன் சென்றிருந்தனர்.

இதன்போது அங்கு கூடியிருந்த சிறுவர் சிறுமியர்களுடன் கலந்துரையாடி அமைச்சர் படமும் எடுத்து கொண்டார்.(அ)

# இலங்கை மீது கடும் அழுத்தங்களை மோடி அரசு பிரயோகிக்க வேண்டும்!



கொழும்பு, நவம்பர் 04
"தமிழர்களின் கோரிக்கைகள் என்ன, அவர்கள் விரும்பும் தீர்வு என்ன ஆகிய விடயங்களை இந்தியாவின் மோடி அரசிடம் நாம் ஏற்கனவே எடுத்துரைத்துவிட்டோம். எனவே, இந்த விடயங்கள் தொடர்பில் மோடி அரசு, இலங்கை அரசுக்குக் கடும் அழுத்தங்களைப் பிரயோகிக்கவேண்டும்."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெரும் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் கோரிக்கை விடுத்துள்ளார். 11

## ஜனாதிபதி பயணித்த ஹெலி திடீரென தரையிறக்கப்பட்டது!

கொழும்பு, நவ. 04
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பயணித்த ஹெலிகொப்டரும் அதனுடன் சென்ற மற்றுமொரு ஹெலிகொப்டரும் நேற்று பிற்பகல் வெள்ளவாய புதுருவகல பாடசாலை விளையாட்டரங்கில் திடீரென தரையிறங்கியுள்ளன.

வெலிமடை பகுதிக்கு பயணித்த ரணில் விக்கிரமசிங்க அப்பகுதியில் நிலவும் மோசமான வானிலை காரணமாக ஹெலியில் பயணிக்க முடியாத நிலை 11

## பூகோள அரசியலுக்கும் கடலட்டை பண்ணைகளுக்கும் தொடர்பில்லை

### கூறுகிறார் மீன்பிடி அமைச்சர் டக்ளஸ்

யாழ்ப்பாணம், நவ. 04
எமது பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள வளங்களை எமது மக்களே முழுமையாக அனுபவிக்க வேண்டும் என்பதே தன்னுடைய எதிர்பார்ப்பு என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எமது மக்களினால் அமைக்கப்படுள்ள கடலட்டை பண்ணைகளை பூகோள அரசியலுடன் சமபந்தப்படுத்துவது அடிப்படை அற்றது எனவும் 11

## பலாலி ஊடாக சென்னைக்கு நேற்று பயணமானார் இந்திய நிதி அமைச்சர்

யாழ்ப்பாணம், நவ. 04
யாழ். நூலகம் மற்றும் நல்லூர் ஆலயத்துக்கு விஜயம் செய்த இந்திய நிதியமைச்சர் பின்னர் இந்திய ஸ்டேட் வங்கியின் யாழ்ப்பாண கிளையின் திறப்பு விழாவில் கலந்து கொண்டார்.

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்த இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்று பலாலி ஊடாக சென்னை பயணமானார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் புதிய தொழில்நுட்பம் மற்றும் தயாரிப்பு வர்த்தக கண்காட்சியை இந்திய நிதியமைச்சர் 11



## ஹமாஸிடம் பணைய கைதியாக இருந்த இலங்கையர் உயிரிழப்பு!

கொழும்பு, நவ. 04
பலஸ்தீனத்தில் இஸ்லாமிய போராளிக் குழுவான ஹமாஸால் பணைக் கைதியாகப் பிடிக்கப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் இலங்கையர் உயிரிழந்தாரென டெல் அவிவில் உள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் 11

## வடக்கில் 401 அதிபர்களுக்கு இன்று நியமன கடிதங்கள்

யாழ்ப்பாணம், நவ. 04
இலங்கை அதிபர் சேவை போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த வடக்கு மாகானத்தை சேர்ந்த 401 அதிபர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் ஏற்பாட்டில் கோப்பாய் கல்வியியற் கல்லூரியில் நடைபெறுகின்றது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் 11

## வடக்கு கடல் வளம் சீனாவுக்கு விற்பனை

### அன்னராசா குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ. 04
வடக்கு மாகாணத்தின் கடல் வளங்கள் மற்றும் வாழ்வாதாரங்களை சீனாவிற்கு விற்பனை செய்யப்படுவதாகவும் இதனால் தாம் சுதந்திரமாக தொழிலில் கடற்றொழிலில் 11

ஈழநாடு



# இப்படியும் நடக்கிறது

உலகை ஆச்சரியப்படுத்திக் கொண்டு இந்தியா வளர்ந்து வருகின்றது. ஒருபுறம் இந்தியாவின் வளர்ச்சி உலகை இந்தியாவின் பக்கம் திரும்பிப் பார்க்க வைக்க, மறுபுறம் சீனாவின் அச்சுறுத்தலை எதிர்கொள்ள இந்தியாவின் உதவி தேவை என்ற கோணத்திலும் அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் இந்தியாவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றன.

நமது பக்கத்து நாட்டின் இந்த வளர்ச்சி அயல்நாடு என்ற வகையில் இலங்கைக்கு மகிழ்ச்சிக்குரியதுதான்.

அதேவேளை அங்கே எட்டுக் கோடி தமிழர்கள்- நமது தொப்புள்கொடி உறவுகள் நமது கோடிக் கரையில் வாழ்ந்து வருவதும் தமிழர்கள் நமக்கு மகிழ்ச்சிக்குரியது என்றாலும் அது நமக்கு சில வகையில் எதிர்வினையாற்றுவதையும் ஏற்றுக்கொண்டாக வேண்டும்.

இந்த எட்டுக்கோடி தமிழர்கள் அந்தக் கரையில் வாழ்வதால்தான், இங்குள்ள நமக்கு அதிகாரங்களை வழங்கினால், அவர்களோடு சேர்ந்து பலமடைந்து விடுவோமோ என்ற பயம் சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் உண்டு. இதனைத்தான் அது நமக்கு எதிர்வினை யாற்றுகின்றது என்றேன். போதாக்குறைக்கு அங்குள்ள தமிழ்த் தேசிய ஆதரவாளர்களும் தெரிவிக்கின்ற வீர வசனங்கள் வேறு சிங்கள மக்களை எப்போதும் எச்சரிக்கையுடன் இருக்க வைக்கின்றது.

எழுபதுகளில் அப்போதைய நமது தலைவர்கள் இந்தியாவில் கௌரவத்துக்குரிய நிலையில் இருந்தார்கள். முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியை நம்மவர்கள் அன்னை இந்திரா என்றே அழைத்தார்கள். அந்த அளவிற்கு இந்தியாவுடனான நமது நெருக்கமும் நமது தலைவர்களுக்கு புதுடில்லி வரை கிடைத்த வரவேற்பும் பெறுமதி மிக்கது. ஒரு தடவை இந்தியாவின் சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் பிரதம அதிதியாக வந்திருந்த ஒரு வெளிநாட்டின் தலைவர் முதல் வரிசையில் பிரதமர் இந்திராவுக்கு அருகே இருந்தார். இந்திரா காந்திக்கு மறுபுறத்தில் நமது அமிர்தலிங்கம் அமரவைக்கப்பட்டிருந்தார் என்றால் நமது தலைவர்களுக்கு அன்னை இந்திரா கொடுத்த முக்கியத்துவத்தை நாம் புரிந்துகொள்ளலாம்.

இன்று நிலமை தலைகீழாக மாறியிருக்கின்றது. அதற்கு காரணம் இந்தியாவின் மனநிலையில் ஏற்பட்ட மாற்றம் என்பதைவிட, இந்தியா நம்பி அரவணைக்கக்கூடிய தலைவர்கள் எவரும் எம் மத்தியில் இல்லை என்பதை நாம் வருத்தத்துடன் ஏற்றுக் கொண்டாக வேண்டும்.

அந்த மாற்றத்துக்கு மற்றுமொரு காரணம் நமது தலைவர்கள் என்று சொல்பவர்கள் தமிழகத்தை மறந்துவிட்டதும் தான். ஈழத்தமிழனுக்கு அடித்தால் அது தமிழகத் தமிழனுக்கு வலிக்கும் என்ற நிலைமை அந்தக் காலத்தில் இருந்தது. அதற்கு காரணம் நமது தலைவர்கள் தமிழகத்துடன் அத்தனை நெருக்கமாக இருந்தனர். ஆனால், இன்று தமிழகத்தின் தலைவர்களுடன் தாங்கள் நெருக்கமானால் புதுடில்லி எங்கே கோபப்பட்டு விடுமோ என்ற பயம் நமக்கு. அதனால் தமிழகத்தை நமது தலைவர்கள் கைவிட்டு பல வருடங்களாகின்றன.

இன்று இந்தப் பத்தியில் சொல்ல வருவது நமக்கு சில நாட்களாக உறுத்திக் கொண்டிருக்கின்ற ஒரு விடயம் பற்றியது.

இந்தியா ஈழத் தமிழர்களைக் கைவிட்டுவிட்டதா? என்ற கேள்வி நமக்குள் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. சில மணி நேர பயணமாக இலங்கை வந்தாலும் எந்தவோர் இந்தியத் தலைவரும் தமிழ் அரசியல் தலைவர்களை சந்திப்பார்கள். அது ஒரு சம்பிரதாய நிகழ்வாக என்றாலும் அது நடக்கும். அதிலும், ஈழத்தமிழர் விவகாரத்துடன் நீண்டகாலமாக தொடர்பில் இருக்கும் இன்றைய இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலத்தில் கொழும்பில் இந்தியத் தூதரகத்தில் ஒரு மூத்த அதிகாரியாக இருந்தவர். அதனால் நமது பிரச்னையை நன்கு அறிந்த இந்தியர்களில் அவருக்கு முக்கிய இடம் உண்டு. அதனால்தானோ என்னவோ, அவர் எப்போதும் வந்தாலும் தமிழ் அரசியல் தலைவர்களை சந்திக்காமல் போவதில்லை. ஆனால், அவர் கடைசியாக கடந்த மாதம் வந்திருந்தபோது வழக்கத்துக்கு மாறாக யாரையும் சந்திப்பதைத் தவிர்த்துக்கொண்டார்.

இப்போது மூன்று நாட்கள் இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இலங்கை வந்து தங்கியிருந்து பல்வேறு தரப்பினரையும் சந்தித்துச் சென்றார். அவர் நிதி அமைச்சர் என்றாலும் ஒரு மதுரைக்கார தமிழச்சி. அவர் வருகையை அறிந்ததும் தமக்கும் அழைப்பு நிச்சயம் வரும், அவர் தங்களை சந்திப்பார் என்று நமது தலைவர்கள் சிலர் நம்பிக்கொண்டு காத்திருந்தனர் என்று தெரியவருகின்றது.

ஆனால், அவரோ யாரையும் கண்டுகொள்ளவில்லை. கண்டிக்கு சென்று மகாநாயக்கர்களைச் சந்தித்து ஆசி பெறுகிறார். பௌத்த விகாரைகளுக்கு சூரிய ஒளியில் மின்சாரம் பெறும் திட்டத்தின் மூலம் அவற்றை ஒளியூட்ட உதவும் திட்டத்திற்கு உதவி வழங்குகின்றார். அந்த திட்டத்தின்கீழ் குருந்தூர்மலை விகாரையும் ஒளிபெறலாம்.

இந்த மாற்றம், யாராலும் ஏற்பட்டதல்ல, அது நம்மால் ஏற்பட்டது என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளாதவரை நமக்கு விமோசனம் கிடைக்கப் போவதில்லை.!

இந்த விடயம் இதுபோன்ற ஒரு பத்தியில் ஆராயப்பட வேண்டியதல்ல. நீண்ட ஆய்வுக்கு உட்படுத்தப்படவேண்டியது.

- ஊர்க்குருவி

# நாட்டிலுள்ள பிரச்னைகளுக்கு ரணிலால் தீர்வு காணமுடியும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நம்பிக்கை

யாழ்ப்பாணம், நவ. 04

நாடு எதிர்கொள்ளுகின்ற அனைத்துப் பிரச்னைகளுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் தீர்வு காண முடியும் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எதிர்காலத்தில் தேர்தல்கள் நடைபெறுகின்ற போது, மக்கள் தங்களின் நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவார்களாயின், தொடர்ந்து வருகின்ற ஐந்து வருடங்களில் நாடு சுபீட்சமான நிலையை அடையும் எனவும் தெரிவித்தார்.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற நிறுவனர் ப. செபராஜா சிங்கத்தின் நினைவு தினம் மற்றும் பரிசளிப்பு விழாவின் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது தமிழ் தலைவர்கள் முன்னெடுத்த போராட்டங்கள் தோல்வி கண்ட நிலையில்தான் அன்றைய காலகட்டத்தில் தென்னிலங்கையில் ஆட்சியில் இருந்தவர்களினால் எங்களுடைய கைகளில் ஓர் ஆயுதப் போராட்டம் வலிந்து கொடுக்கப்பட்டது.

ஆனால், அந்த ஆயுத போராட்டமும் ஒரு கட்டத்துக்கு பிறகு திசை திரும்பி பலவீனப்பட்டு போய்விட்டது. இவ்வாறு பலவீனப்பட்டு போய்க் கொண்டிருந்த போதுதான் 1987 களில் இலங்கை - இந்திய ஒப்பந்தம் என்ற ஒரு பொன்னான வாய்ப்பு கிடைத்தது.

அதை நாங்கள் பின்பற்றி இருப்போமாக இருந்தால் இன்று நாம் பல மடங்கு முன்னேற்றகரமான ஒரு சூழலில் வாழ்ந்து கொண்டிருந்திப்போம் என்று நினைக்கின்றேன். ஆனால் அது வீணடிக்கப்பட்டு விட்டது.

நாட்டில் நடைபெற்ற அழிவு யுத்தம் காரணமாக தேவையற்ற பொருளாதார செலவுகள் மற்றும் யுத்தத்துக்காக வெளிநாடுகளில் பெற்ற கடன்களும் அதை விட நாட்டினுடைய ஏனைய தேவைகளுக்காக பெறப்பட்ட கடன்களும் சரியான ஒரு பொறிமுறையை நோக்கி கையாளப்படாது போய்விட்டது. இதனால் நாட்டை முன் கொண்டு செல்ல முடியாத நிலைக்கு எமது நாடு தள்ளப்பட்டது.

இவ்வாறான நெருக்கடி நிறைந்த காலகட்டத்தில் இந்த நாட்டை பொறுப்பெடுத்த இன்றைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டை சரியான பாதையில் கொண்டு சென்று நிலைமைகளை சீர்செய்து வருகின்றார். அதில் வெற்றியும் கிடைத்து வருகிறது.

அந்தவகையில் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் இன்றைய ஜனாதிபதி வெற்றி பெறுவாராக இருந்தால், தொடர்ந்து வருகின்ற ஐந்து வருடத்தில் நாடு இன்னும் பல மடங்கு முன்னோக்கி செல்லும் என்பது என்னுடைய நம்பிக்கை - என்றார்.

# "பட்ஜெட்டில் சம்பள உயர்வு இல்லையேல் போராட்டம்"

கொழும்பு, நவ. 04

வரவு-செலவு திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பள உயர்வுக்கு நிதி ஒதுக்கப்படவேண்டும் - இல்லையேல் போராட்டம் வெடிக்கும் என தொழில்சங்க கூட்டமைப்பு உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர்கள் இதனை தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது அரச ஊழியர்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து நாங்கள் போராட்டத்துக்கு வருகிறோம். விசேடமாக வரவு-செலவுத் திட்டத்தில் 20,000 ரூபாயில் சம்பளம் அதிகரிக்க வேண்டும். அடுத்தது அரசு கொண்டு வருகின்ற அடக்குமுறை சட்டங்களை நிறுத்தவேண்டும். மறுபக்கத்தால் விசேடமாக பணி மட்டத்திலிருந்து மக்களுக்கான சலுகைகள் வழங்க வேண்டும். தற்போது மக்கள் வாழ முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். அதனாலே பொருள்களை விலை குறைத்து சலுகை வழங்கவேண்டும். மின்சாரம் எரிபொருள், வாழ்க்கைச் செலவு எல்லாம் அதிகரித்துள்ளன. மக்கள் வாழ முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். அதனால் மக்களுக்கு சலுகை வழங்கவேண்டும்.

வரும் 13ஆம் திகதி வரவு-செலவுத்திட்டத்தில் இவற்றுக்கு பதில் வேண்டும். வரவு-செலவுத்திட்டத்தில் பதில் இல்லாவிட்டால் எங்கள் போராட்டம் முன்செல்லும்-என்றனர்.

# டெங்குக்கு 39 பேர் பலி!

கொழும்பு, நவ. 04

இந்த ஆண்டில் டெங்கு காய்ச்சலால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 39 ஆக அதிகரித்துள்ளது.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 68 ஆயிரத்து 174 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்திலேயே அதிகளவிலான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். அந்த எண்ணிக்கை 32 ஆயிரத்து 939 ஆக காணப்படுகின்றது.

கொழும்பு மாவட்டத்தில் 14 ஆயிரத்து 527 டெங்கு நோயாளர்களும், கம்பஹா மாவட்டத்தில் 14 ஆயிரத்து 34 டெங்கு நோயாளர்களும், களுத்துறை மாவட்டத்தில் 04 ஆயிரத்து 378 டெங்கு நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (அ)

# மின் விளக்கை ஒளிரவிட்டதால் தாக்குதல் கடமை நேரத்தில் தூங்கியவர் அட்டகாசம்!

கொழும்பு, நவ. 04

கண்டி தேசிய வைத்தியசாலையில் மின்விளக்கை ஏற்றியதால் தூக்கம் கலைந்ததாக குறிப்பிட்டு, மூன்று சிறுமியர்களை தாக்கிய குற்றச்சாட்டில் சிற்றூழியர் ஒருவர் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

கண்டி தேசிய வைத்தியசாலையின் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவின் அறையொன்றில் கடமை நேரத்தின் போது உறங்கிக் கொண்டிருந்த இந்த சிற்றூழியர், மின்விளக்கு ஒளிரவிடப்பட்டதால் தூக்கம் கலைந்ததாக குறிப்பிட்ட மூன்று சிற்றூழியர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு தாக்கியதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சுகாதார பணிப்பாளர் நாயகத்தின் உத்தரவின் பிரகாரம், அவர் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளதாக கண்டி தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் இரேஷா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அவரது தாக்குதலால் காயமடைந்த மூன்று சிற்றூழியர்கள் 17ஆம் இலக்க விடுதியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

தாக்குதலை மேற்கொண்டதாக கூறப்படும் சிற்றூழியரை வைத்தியசாலை பொலிஸார் கைது செய்து மேலதிக விசாரணைகளுக்காக கண்டி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (அ)

ஈழநாடு
Eelanadu
04.11.2023 சனிக்கிழமை
சோபகிருது வருடம், ஐப்பசி 18

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

# திருகோணமலையை காப்பாற்றுதல்?

அண்மையில், இரா. சம்பந்தன் - அவரது இயலாமையை கருத்தில் கொண்டு – அவர் பதவி விலகுவதே சரியானதென்னும் கருத்தை சுமந்திரன் வெளியிட்டிருந்தார். இது தொடர்பில் இலங்கை தமிழரசு கட்சியினர் மத்தியில் ஆதரவாகவும் எதிராகவும் கருத்துகள் முன்வைக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான சிவஞானம் சிறீதரனிடம் - திருகோணமலையை காப்பாற்றுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. இதுவும் சம்பந்தனை வெளியேறச் சொல்லும் இன்னொரு நகர்வா? ஏனெனில், சம்பந்தன் இயங்க முடியாத நிலையில் இருப்பது எந்தளவு உண்மையோ அதேயளவு உண்மை அவர் இப்போதும் கருத்தில் கொள்ளப்படும் மூத்த அரசியல்வாதியாகவே இருக்கின்றார். சம்பந்தன், பதவி விலகவேண்டும் என்றவாறான அபிப்பிராயங்கள் முன்வைக்கப்பட்டுக் கொண்டிருக்கும்போது, மறுபுறும் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐரோப்பிய ஒன்றிய தூதுக் குழுவினர் சம்பந்தனை சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

இந்த நிலையில், சம்பந்தன் திருகோணமலையை பிரதிநிதித்துப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கின்றபோது திருகோணமலையை காப்பாற்றுமாறு கிளிநொச்சியிலிருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரிடம் கோரிக்கை விடுவதானது, சம்பந்தனை இரண்டாம் நிலைக்கு தள்ளும் ஒரு செயலாகவே தெரிகின்றது. இதற்கப்பால் அண்மைக்காலமாக இலங்கை தமிழரசு கட்சிக்குள் நிலவிவரும் தலைமைத்துவ போட்டியும் இதற்கு பின்னால் இருக்கின்றது. தலைவர் போட்டியில் ஈடுபடுபவர்கள் கட்சியின் ஆதரவாளர்கள் மத்தியில் செல்வாக்கை அதிகரித்துக் கொள்ளும் முயற்சியிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

சம்பந்தன் 1977இல் தமிழர் விடுதலைக் கூட்டணியில் போட்டியிட்டு, திருகோணமலையின் பாராளுமன்ற உறுப்பினரானார். சம்பந்தன் திருகோணமலையில் செல்வாக்குமிக்க அரசியல்வாதி. 2009இற்கு பின்னரான அரசியல் சூழலில் ஒட்டுமொத்த தமிழ் மக்களின் தலைவரானார். ஒப்பீட்டடிப்படையில் சம்பந்தனுடன் ஒப்பிடக்கூடிய எவரும் இல்லாத காரணத்தால்தான் புலிகளின் காலத்திலேயே சம்பந்தன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரானார். சம்பந்தன் அடிப்படையில் விடுதலைப் புலிகள்மீது அபிமானம் கொண்டவரல்ல. இந்தச் செய்தி தமிழ் சூழலுக்கு புதிதுமல்ல. எனினும், சம்பந்தன் தமிழ் அரசியல் அரங்கில் தவிர்க்க முடியாத ஒருவராகவே இருந்தார். அவ்வறான ஒருவர் திருகோணமலையில் இருந்தும் - திருகோணமலையில் கையாள முடியாமல்போன விடயங்களை பிற மாவட்டத்தை சேர்ந்த ஒருவரால் செய்ய முடியுமென்று எதிர்பார்ப்பது அறியாமையாகும்.

திருகோணமலை ஒருகாலத்தில் தமிழ் மக்களின் தலைநகரமென்று பிரகடனம் செய்யப்பட்ட இடம். ஆனால், இன்றைய நிலையில் திருகோணமலை மூவின மக்கள் வாழும் ஒரு மாவட்டம். முஸ்லிம்களே பெரும்பான்மை சமூகம். இந்த நிலையில் திருகோணமலையில் தொடர்ந்தும் பௌத்த விகாரைகளை நிறுவுவதான குற்றச்சாட்டுகள் உண்டு. அதே வேளை, திருகோணமலை இந்தியாவிற்கு முக்கியமான இடம். அண்மையில் திருகோணமலையில் இந்தியன் வங்கியின் கிளையை, நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் திறந்து வைத்தார். திருகோணமலையை நோக்கி முக்கிய திட்டங்கள் பல முன்னெடுக்கப்படவுள்ள நிலையில்தான், திருகோணமலையில் இந்தியன் வங்கியின் கிளை திறக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் திருகோணமலையை தனித் தமிழ் இடம்மென்று கூறி, இனி அரசியல் செய்ய முடியாது. முடிந்தவரையில் திருகோணமலையில் தமிழ் மக்களின் இருப்பை பலப்படுத்துவதற்கும் – தொடர்ந்தும் மக்கள் அப்பகுதியில் நம்பிக்கையுடன் வாழக்கூடிய சூழலை ஏற்படுத்த வேண்டியதே அரசியல் தரப்புகளின் பணி. இதனை வெளியிலிருந்து எவரும் செய்ய முடியாது. அந்த மாவட்டத்தைச் சேர்ந்த அரசியல்வாதிகள், புத்திஜீவிகள், சமூக தலைவர்கள் அனைவரும் ஒன்றிணைந்துதான் அதனை செய்ய வேண்டும்.

## வடமாகாண மரநடுகை மாதம்

**கார்த்திகை - 2023**

*“ஒரு மனிதன் தனக்காக இல்லாவிட்டாலும் தனது எதிர்கால சந்ததியினருக்காக மரங்களை நாட்டவேண்டும்.”*

**- அலெக்சாண்டர் சிமித் (ஸ்கொட்லாந்து கவிஞர்)**



# பெறுமதி சேர் வரி அதிகரிப்பினை கடுமையாக எதிர்க்கும் சபாநாயகர்

*கொழும்பு, நவ. 04*

*பெறுமதி சேர் வரி (வற்) அதிகரிக்கப்படுவதனை அனுமதிக்க முடியாது என சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.*

*ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.*

*எரிபொருட்களின் விலைகள் சிறியளவில் அதிகரிப்பதை மக்களால் தாங்கிக் கொள்ள முடியும் என்ற போதிலும் பெறுமதி சேர் வரியை அதிகரிக்கும் தீர்மானத்தை ஏற்க முடியாது.*

*பெறுமதி சேர் வரியை 18 வீதமாக அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.*

*எனினும், இந்த தீர்மானத்தில் மாற்றம் ஏற்படலாம் எனவும் வரி அதிகரிப்பு தொகையில் மாற்றம் ஏற்படலாம் எனவும் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார். (அ)*

# சிகரெட் பெட்டியைப் பறித்த பொலிஸாருக்கு கடூழிய சிறை

*கொழும்பு, நவ. 04*

*இரவு ரோந்து கடமையில் ஈடுபட்டிருந்தபோது சீன பிரஜை ஒருவரிடம் இருந்து 2 ஆயிரம் ரூபாய் மற்றும் சிகரெட் பெட்டியை திருடிய குற்றச்சாட்டில் குற்றஞ்சாட்டப்பட்ட கொள்ளுப்பிட்டி பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் கான்ஸ்டபிள் ஒருவருக்கு இரண்டு வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்து கோட்டை நீதிவான் திலின கமகே தீர்ப்பளித்தார்.*

*இந்த சம்பவம் 2016 ஆம் ஆண்டு நடந்தது. ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த இரண்டு பொலிஸார் தன்னிடம் இருந்த பணத்தையும் சிகரெட் பெட்டியையும் பறித்து சென்றதாக சீன நாட்டவர் புகார் அளித்திருந்தார்.*

*நீண்ட காலமாக நிலுவையில் இருந்த வழக்கில் தற்போது வனாத்தவில்லுவ பொலிஸில் கடமையாற்றும் லபீர் என்ற சார்ஜன்ட் மற்றும் துமிந்த என்ற கான்ஸ்டபிள் ஆகியோர் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளனர். (அ)*

# ஐஸ் போதையுடன் இளைஞர் கைது!

*கொழும்பு, நவ. 04*

*பதுளை, கொட்டகொட பகுதியில் உள்ள வீடொன்றில் படுக்கை அறையின் மெத்தையின் கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்த 6600 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக பதுளை போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினர் தெரிவித்தனர்.*

*32 வயதுடைய பதுளை, பல்லேகம, கொட்டகொட பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.*

*அவரை நீதிமன்றில் முற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. (அ)*

# குவியல் குவியலாக வீழ்ந்து கிடந்த பணத்தை எடுத்து இலங்கை வங்கி அதிகாரிகளிடம் ஒப்படைத்த நபர்!


*கொழும்பு, நவ. 04*

*மாத்தறை இலங்கை வங்கியின் வாகன தரிப்பிடத்துக்கு அருகில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை மாலை வீழ்ந்து கிடந்த 50 இலட்சம் ரூபா பணத்தை மாத்தறை நகரிலுள்ள கூரியர் சேவை நிறுவனம் ஒன்றின் உதவி முகாமையாளரான சந்தன உதயங்க (வயது-38) என்பவர் கண்டெடுத்து அதனை வங்கியிடம் ஒப்படைத்தார்.*

*வங்கி ஊழியர்கள் ஏ.ரி.எம்களுக்கு எடுத்துச் சென்ற அல்லது மத்திய வங்கியில் வைப்பிலிட எடுத்துச் சென்ற 50 இலட்சம் ரூபா பணமே வீழ்ந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.*

*குவியல் குவியலாக தரையில் வீழ்ந்து காணப்பட்ட 50 இலட்சம் ரூபா பெறுமதியான நோட்டுகளைப் போட்டோ எடுத்து, பின்னர் இது தொடர்பில் பாதுகாப்பு அதிகாரிக்கு தெரிவித்து வங்கி அதிகாரியை அழைத்து அவர்களிடம் குறித்த நபர் பணத்தை ஒப்படைத்துள்ளார். (அ)*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு

நவம்பர் - 04 சனிக்கிழமை
சோபகிருது வருடம் - ஐப்பசி 18
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : சப்தமி




**மேடம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். தைரியம் கூடும் நாள்.

**இடபம்**
குடும்பத்தில் நிம்மதி உண்டு. வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் போட்டிகள் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடைதாமதம் ஏற்படும். அலைக்கழிக்கப்படுவார்கள். சகிப்பு தன்மை தேவைப்படும் நாள்.

**கடகம்**
மறைமுக விமர்சனங்களும் தாழ்வுமனப்பான்மையும் வந்துச்செல்லும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**சிம்மம்**
கடந்த கால இனிமையான அனுபவங்களை நினைவுக் கூர்ந்து மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் தைரியமாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். சிந்தனைத் திறன் பெருகும் நாள்.

**கன்னி**
உங்கள் செயலில் வேகம் கூடும். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் நம்பிக்கையை பெறுவீர்கள். சாதித்துக் காட்டும் நாள்.

**துலாம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டுப் பேசுவீர்கள். வாகனங்களை சரி செய்வீர்கள். உத்தியோகத்தில் புது அதிகாரி உங்களை மதிப்பார். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். உத்தியோகத்தில் மற்றவர்களின் வேலையையும் சேர்த்து பார்க்க வேண்டி வரும். நிதானம் தேவைப்படும் நாள்.

**தனுசு**
உங்கள் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். புது பொறுப்புகளை ஏற்பீர்கள். தெளிவு பிறக்கும் நாள்

**மகரம்**
குடும்பத்தினருடன் சுபவிஷயங்களில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் இரட்டிப்பு லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் சில புதுமைகளை செய்வீர்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**கும்பம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றி அடையும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்கள் வேலைகளை பகிர்ந்து கொள்வீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**மீனம்**
எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். புதிய வாகனங்கள் வாங்குவீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். பழைய நினைவுகளில் மூழ்கும் நாள்.

# யாழிலிருந்து தமிழகத்துக்குள் தீவிரவாதிகள் ஊடுருவ திட்டம்

## கோவையில் தேசிய புலனாய்வு முகமை பணிமனை

சென்னை, நவ. 04

**யாழ்ப்பாணத்தில் இருந்து படகு மூலம் தமிழகத்துக்குள் ஊடுருவி தாக்குதல் நடத்த பயங்கரவாத அமைப்புகள் திட்டமிட்டுள்ளன. கேரளாவிலும் தாக்குதல் நடத்த உள்ளனர்.**

இதற்காக இரு மாநிலங்களிலும், ஆட்களை நியமித்துள்ளனர்.

இதையடுத்து, பயங்கரவாத சக்திகளின் சதித் திட்டங்களை முறியடிக்க, கோவையில் தேசிய புலனாய்வு முகமை (என். ஐ. ஏ.) கிளை பணிமனையை ஆரம்பிக முடிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் கடந்த பெப்ரவரி 2ஆம் தேதி சட்ட விரோத செயலில் ஈடுபட்ட, பாகிஸ்தானைச் சேர்ந்த மூன்று பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில் மூவரும் தமிழகம் மற்றும் கேரளாவில் தாக்குதல் நடத்த சதித் திட்டம் தீட்டி இருந்தது தெரியவந்தது. சமீபத்தில், மஹாராஷ்டிரா மாநில உளவுப்பிரிவு பொலிஸார் பயங்கரவாதிகள் ஊடுருவல் குறித்து ஆய்வு ஒன்றை மேற்கொண்டனர்.

இதில், பாகிஸ்தானின், லஷ்கர் - இ - தொய்பா எனும் பயங்கரவாத அமைப்பு தென் மாநிலங்களில் தாக்குதல் நடத்த, மூளைச்சலவை செய்யப்பட்ட இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருவது தெரியவந்தது.

இதனிடையே, யாழ்ப்பாணம் பகுதியில் இருந்து படகு மூலம் தமிழகத்துக்குள் ஊடுருவி தாக்குதல் நடத்த பயங்கரவாத அமைப்புகள் திட்டமிட்டுள்ளன. கேரளாவிலும் தாக்குதல் நடத்த உள்ளனர்.

இதற்காக, இரு மாநிலங்களிலும், ஆட்களை நியமித்துள்ளனர். இவர்கள் முஸ்லிம் இளைஞர்களை மூளைச்சலவை செய்து வருவதும் தெரியவந்தது.

இதையடுத்தே, தென் மாநிலங்களை குறிவைத்து தேசிய புலனாய்வு முகமை பணிமனை ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# நடிகர் விஜய் அரசியல் கட்சி ஆரம்பிப்பதை வரவேற்கிறேன்

## நாம் தமிழர் சீமான்

சென்னை, நவ. 04

நடிகர் விஜய் அரசியல் கட்சி ஆரம்பித்தால் அவரை வாழ்த்தி வரவேற்பேன் என்று தெரிவித்திருக்கிறார் நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான்.

லியோ திரைப்பட வெற்றி விழா சென்னையில் நடந்தது. இதில், நடிகர் விஜய் "தளபதி என்றால் என்ன அர்த்தம் மக்கள் தான் மன்னர்கள் நான் உங்கள் கீழ் இருக்கும் தளபதி நீங்கள் ஆணையிடுங்கள் நான் செய்து முடிக்கிறேன்", என்று தனது அரசியல் பயணத்தை சூசகமாக கூறினார்.

இந்த நிலையில், நடிகர் விஜயின் அரசியல் குறித்த பேச்சுகளுக்கு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கருத்து தெரிவிக்கையில்,

"அரசியல் கட்சி தொடங்க நடிகர் விஜய்க்கு கனவு இருப்பதென்றால் அவரை வாழ்த்த வேண்டும். ஒருவர் முதுகுக்கு பின்னால் நாம் செய்யவேண்டியது தட்டிக்கொடுப்பது மட்டுமே. தம்பியை தட்டிக்கொடுப்போம். விபத்து விதியாகி விடாது, எம். ஜி. ஆரை போன்று அரசியலுக்கு வந்தவுடன் வெற்றி பெறுவது எளிதல்ல. கட்சி தொடங்கியவுடன் வெற்றி பெற்றால் அது பெரும்புரட்சிதான். நாங்கள் யாரோடும் கூட்டணி இல்லை. எங்களோடு யார் வேண்டுமானாலும் கூட்டணிக்கு வரலாம்" என்றார். (ஐ)

# தமிழ்நாட்டில் கலவரங்களை உருவாக்க பா. ஜ. க. முயற்சி!

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சாடல்

சென்னை, நவ. 04

தமிழ்நாட்டில் தாங்கள் கால் ஊன்ற முடியாத நிலையில் கலவரங்களை உருவாக்கி இதன் மூலம் அரசியல் ஆதாயம் தேடும் மிக மலிவான முயற்சியில் ஈடுபட்டுள்ள பா. ஜ. கவின் வன்முறை அரசியலை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் முத்தரசன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தங்களின் கொள்கை பலத்தால் அல்லது தங்களது மத்திய ஆட்சியின் மூலம் கடந்த 10 ஆண்டுகளில் செய்திட்ட சாதனைகள் தேர்தலில் கொடுத்திட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றியது என எதனையும் வெளிப்படுத்திட இயலாத நிலையில் கலகம் செய்து அதன் மூலம் அரசியல் ஆதாயம் தேடும் அற்பத்தனமான செயலில் பா. ஜ. க. ஈடுபட்டு வருவது கடும் கண்டனத்திற்குரியது.

பா. ஜ. கவின் வன்முறை செயல்பாடுகளை கண்டிக்க வேண்டிய அக் கட்சியின், அகில இந்திய தலைமை நால்வர் கொண்ட விசாரணைக் குழு அமைத்து, விசாரணைக்கு அனுப்புகின்றது.

அக்குழு ஒரே நாளில் விசாரணை முடித்து தமிழ்நாடு அரசின் மீது பழி சுமத்தி பேட்டி கொடுத்ததுடன், அரசின் மீது புகார் தெரிவித்து ஆளுநரிடம் புகார் மனு கொடுத்து சென்றுள்ளனர். மேலும் இந்த முறைப்பாடு குறித்து மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா நடவடிக்கை எடுப்பார் என்று மிரட்டும் தொணியில் கூறுகின்றார். இவை யாவும் பாராளுமன்ற ஜனநாயக மரபுகளை சிதைப்பதாகும்.

மொத்தத்தில் தமிழ்நாட்டில் திட்டமிட்டே சட்டம்-ஒழுங்கு பிரச்னைகளை உருவாக்கிட பா. ஜ. க. மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மிக வன்மையாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கின்றது - என்றுள்ளது. (ஐ)

# அமைச்சர் வேலுவின் 80 இடங்களில் சோதனை

சென்னை, நவ. 04

அமைச்சர் எ. வ. வேலுவின் வீடு, ரியல் எஸ்டேட் நிறுவனம், அரசு ஒப்பந்தகாரர்களின் வீடு மற்றும் பணிமனைகள் என அவருக்கு சொந்தமான - நெருக்கமான 80 இடங்களில் வருமான வரித்துறை அதிகாரிகள் அதிரடி சோதனை நடத்தினர்.

வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்துள்ளார் என்றும் வரி ஏய்ப்பு செய்துள்ளார் எனவும் வந்த முறைப்பாடுகளின் அடிப்படையில் 100இற்கும் மேற்பட்ட அதிகாரிகள் இந்த சோதனையில் ஈடுபட்டனர். (ஐ)

# முதலீட்டாளர்கள் விரும்பாத இடமாக மாறிவரும் இலங்கை!

## திலும் அமுனுகம சுட்டிக்காட்டு



கொழும்பு, நவ. 04

**அதிகரித்த மின் கட்டணங்கள், வரிகள் முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன என முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான செலவுகள் மிகவும் அதிகரித்துச் செல்வதால் இலங்கை முதலீட்டாளர்கள் விரும்பாத இடமாக மாறிவருகின்றது. இதன் காரணமாக இலங்கையில் முதலீடு செய்யுமாறு முதலீட்டாளர்களை கேட்டுக்கொள்வது புதிய சவாலாக மாறிவருகின்றது.

அதிகரித்துவரும் மின் கட்டணமே முதலீட்டாளர்களை இலங்கையில் முதலீடு செய்யுமாறு கேட்டுக்கொள்வதில் கடுமையான சவாலாக உள்ளது.

பொதுச்சேவைகள் ஆணைக் குழுவின் தீர்மானம் வர்த்தக சமூகத்தின் அனைத்து தரப்பினருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. வர்த்தக நடவடிக்கைகளுக்கான செலவுகள் அதிகரிப்பதால் உள்ளூர் உற்பத்திகளால் வெளிநாட்டுச் சந்தையில் போட்டிபோட முடியாத நிலை காணப்படுகின்றது.

மின் கட்டண அதிகரிப்பு குறித்து உங்கள் நிலைப்பாட்டையை நானும் கொண்டுள்ளேன். இது எங்கள் ஏற்றுமதிகளை பாதிக்கின்றது. நாளாந்தம் அதிகரிக்கும் செலவுகள் முதலீட்டாளர்களை கொண்டுவரும் எங்கள் முயற்சிகளை சவால் மிகுந்ததவையாக மாற்றுகின்றன. ஏற்கனவே இங்கு முதலீடு செய்தவர்களை தக்கவைப்பதும் சவால் மிகுந்ததாக காணப்படுகின்றது-என்றார். (அ)



# மன்னாரில் இருந்து கொழும்புக்கு பயணித்த பஸ் கவிழ்ந்து விபத்து!

கொழும்பு, நவ. 04

மன்னாரிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த பயணிகள் போக்குவரத்து பஸ் ஒன்று மதுரங்குளி 10 கணுவ பகுதியில் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது. விபத்தின்போது பஸ்ஸில் சுமார் 30 பயணிகள் பயணித்தனர்.

மன்னாரிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த இந்த சொகுசு பஸ் மதுரங்குளி 10 கணுவ பிரதேசத்தில் மற்றுமொரு வாகனத்தை முந்திச் சென்றதாகவும், அந்த நேரத்தில் பஸ் வீதியை விட்டு விலகி கவிழ்ந்ததாகவும் கூறப்படுகின்றது.

பஸ் ஒரு பக்கமாக கவிழ்ந்தது. அப்போது பஸ்ஸில் பயணித்த ஏறக்குறைய 30 பயணிகள் பெரும் முயற்சியுடன் இறங்கியதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் ஆவணம் அழிப்பு

## அரச மருந்தகவியலாளர் சமூகம் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 04

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் முக்கிய ஆவணங்கள் அழிக்கப்பட்டுள்ளன என அரசாங்க மருந்தகவியலாளர்கள் சமூகம் குற்றம் சாட்டியுள்ளது.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பிரதம நிறைவேற்று அதிகாரி வைத்தியர் விஜித் குணசேகரவே இதனை செய்துள்ளார் என அரச மருந்தகவியலாளர்கள் சமூகத்தின் தலைவர் துசார ரணதேவ தெரிவித்தார்.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பிரதம நிறைவேற்று அதிகாரி சில ஆவணங்களை அழித்துள்ளார் என அவர் குறிப்பிட்டார்.

பிரதம நிறைவேற்று அதிகாரி முதலாம் திகதி தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபைக்கு விஜயம் மேற்கொண்டு சில ஆவணங்களை அழித்துள்ளார் என அவர் கூறினார். (அ)

# பாடசாலை மாணவி விபத்தில் உயிரிழப்பு

கொழும்பு, நவ. 04

மாவத்தகம, கெம்பிலிதியெத்த புராதன விகாரைக்கு முன்பாக இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் 16 வயது மாணவி உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் வீதியில் சறுக்கி எதிர்திசையில் வந்த பஸ்ஸுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் கஹபத்வல பிரதேசத்தை தந்தையும், மகளும் படுகாயமடைந்த நிலையில், மாவத்தகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

பின்னர், 16 வயதுடைய மகள் மேலதிக சிகிச்சைக்காக குருநாகல் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில், உயிரிழந்தார். (அ)

# தேர்தல் சட்டங்களை மதிப்பீடு செய்வதற்கு 10 பேரை கொண்ட ஆணைக்குழு நியமனம்!

கொழும்பு, நவ. 04

ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர் பிரியசாத் டெப் தலைமையிலான 10 பேர் கொண்ட விசாரணை ஆணைக்குழுவை நியமித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டார்.

தற்போதைய தேர்தல் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் அனைத்தையும் முழுமையாக மதிப்பாய்வு செய்வது, விசாரணைகள் மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்வது மற்றும் இந்தச் சட்டங்களை சமகாலத் தேவைகளுடன் சீரமைப்பதற்கான அத்தியாவசியத் திருத்தங்களுக்கான பரிந்துரைகளை வழங்குவது ஆணைக்குழுவின் முதன்மைப் பணியாகும்.

இந்த விரிவான செயல்முறையை 6 மாத காலக்கெடுவுக்குள் முடிக்க ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவில் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் பின்வருமாறு:

1. நீதியரசர் வெவகே பிரியசாத் ஜெராட் டெப் (ஜனாதிபதி சட்டத்தரணி-ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர்)
2. சுந்தரம் அருமைநாயகம்
3. சேனநாயக்க அலிசந்தரலகே
4. நளின் ஜயந்த அபேசேகர(ஜனாதிபதி சட்டத்தரணி)
5. ராஜித நவீன் கிறிஸ்டோபர் சேனாரத்ன பெரேரா
6. அஹமட் லெப்பை மொஹமட் சலீம்
7. செல்வி சகாரிகா டெல்கொட
8. திருமதி எஸ்தர் ஸ்ரீயானி நிமல்கா பெர்னாண்டோ
9. விதாரணகே தீபானி சமந்தா ரொட்ரிகோ
10. ஆலன் கார்மைக்கேல் வெரே டேவிட்

தற்போதுள்ள அனைத்து தேர்தல் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை ஆய்வு செய்து தேவையான திருத்தங்களுக்கான பரிந்துரைகளை வழங்க ஆணைக்குழு பணிக்கப்பட்டுள்ளது. பெண்கள் மற்றும் இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது, பாரம்பரிய அச்சிடப்பட்ட வாக்குச் சீட்டுகளுக்குப் பதிலாக நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மின்னணு வாக்களிப்பை அறிமுகப்படுத்துவது மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களுக்கு வாக்களிக்கும் வசதி உள்ளிட்ட பல்வேறு காரணிகளுக்கு இந்தப் பரிந்துரைகள் சிறப்பு கவனம் செலுத்தும்.

மேலும், அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களால் ஊடகங்களை சரியான முறையில் பயன்படுத்துவதற்கு வழிகாட்டும் ஊடக தரங்களை உருவாக்குவதற்கான பரிந்துரைகளை முன்மொழிவதுடன், அரசியல் மற்றும் பொது விவகாரங்களை நிறைவேற்றுவதில் அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் மற்றும் அவற்றின் உறுப்பினர்களுக்கான நடத்தை விதிகளையும் அவர் முன்மொழிவார்கள்.

மேலும், நம்பிக்கை மற்றும் பொதுப் பொறுப்புணர்வை வளர்க்கும் வகையில் அரசியல் கட்சிகளின் பதிவு மற்றும் செயல்பாடுகள் தொடர்பான சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை வலுப்படுத்துவதற்கான வழிகளை ஆணைக்குழு பரிந்துரைக்கும். (அ)

# உள்ளூராட்சி நிறுவனங்களில் நிரந்தரமற்ற 8,400 பணியாளர்களுக்கு நிரந்தர நியமனம்!

## இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவிப்பு

கொழும்பு, நவ. 04

மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படும் விசேட திட்டத்தின் ஊடாக அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கிய, சுகாதார மற்றும் கல்வித் துறைகளுக்கு 9 பில்லியன் ரூபாய் வழங்கப்படவுள்ளதாக மாகாண சபைகள், உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார்.

அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்தவுடன் மாகாண சபைகளுக்குட்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களில் நிரந்தரமற்ற 8 ஆயிரத்து 400 பணியாளர்கள் நிரந்தர அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு, அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த 36 ஆண்டுகளில் செய்யத் தவறிய பணிகளை ஒன்றரை ஆண்டுகளில் முன்னெடுத்து வருகின்றோம்.

வட மத்திய மற்றும் வட மாகாணங்களில் தற்போது வீதிகளை அடையாளம் கண்டு, பட்டியலிடும் பணி நிறைவடைந்துள்ளன.

எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் இரண்டு மாகாணங்களிலும் பணிகளை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளன.

எஞ்சிய 6 மாகாணங்களுக்கான காலவரையறையை தயாரித்து பயிற்சிகளை வழங்கி 2024 ஆம் ஆண்டில் இலக்கை அடைய எதிர்பார்க்கப்படுகிறது.

எமது அமைச்சின் கீழ் உலக வங்கியின் ஆதரவின் கீழ் செயற்படுத்தப்பட்ட செயற்றிட்டத்தின் மூலம் ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கிய சுகாதார மற்றும் கல்வித் துறைக்கு ஒன்பது பில்லியன் ரூபாவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம்-என்றார். (அ)

# தேங்காய் அறுவடை வீழ்ச்சி

கொழும்பு, நவ. 04

தென் மாகாணத்திலுள்ள தென்னந்தோப்புகளில் கடுமையாகப் பரவியுள்ள தென்னைப் பூச்சி தொற்றைக் கட்டுப்படுத்துவதில் சலுன்வில தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட கொள்ளைப் பூச்சி மிகவும் வெற்றிகரமானதாக உள்ளதாக ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

பூச்சி அச்சுறுத்தல் காரணமாக, தென்பகுதியில் தேங்காய் அறுவடை கடந்த காலங்களில் சுமார் 60 சதவீதம் குறைந்துள்ளது.

இயற்கை சூழலில் காணப்படும் பூச்சியை உயிரியல் கட்டுப்பாட்டு உத்தியாகப் பயன்படுத்துவதன் மூலம் தென்னைப் பூச்சியின் அச்சுறுத்தல் கணிசமான அளவில் குறைக்கப்பட்டுள்ளதாக தென்னை ஆராய்ச்சி நிறுவனம் கூறுகிறது.

தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் கூற்றுப்படி, சுமார் 5000 கொள்ளையடிக்கும் பூச்சிகள் தென்னை மரத்தின் பழங்கள் குறைந்தது இரண்டு ஆண்டுகளுக்கு அவ்வப்போது பயன்படுத்தப்பட வேண்டும்.

தென்னைப் பூச்சி நோயை 100 வீதம் ஒழிக்கக்கூடிய முறை இதுவரை கண்டுபிடிக்கப்படாத நிலையில் இந்த கொள்ளைப் பூச்சியின் பாவனையால் மைட் நோய் காரணமாக 60 வீதம் தேங்காய்களின் அளவைக் குறைக்க முடிந்துள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஈழநாடு



# வேலைநிறுத்தங்களை செய்து வரிப்பணத்தை அழிக்காதீர்கள்

## கோருகின்றார் வஜிர அபேவர்தன




**கொழும்பு, நவ. 04**

**சுற்றுலா மற்றும் தனியார் துறை மூலம் சம்பாதிக்கும் வரிப்பணம் வேலைநிறுத்தப் போராட்டங்களினால் அளிக்கப்படக்கூடாது என பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.**

**இரத்தினபுரி மாகாண சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் இளைஞர் சந்திப்பின் போதே வஜிர அபேவர்தன இந்த விடயத்தை தெரிவித்தார்.**

அத்துடன், வங்குரோத்து அடைந்த நாட்டை மீட்டெடுத்து நாட்டை நல்வழியில் கொண்டு செல்லும் நேரத்தில் நாட்டு மக்கள் கவனமாக செயற்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டார்.

அரசு ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்தும் போது தனியார் துறை ஊழியர்கள் உழைக்கும் பணத்திலும், சுற்றுலா வர்த்தகத்தில் ஈடுபடும் மக்கள் வழங்கும் வரிப்பணத்திலும் சம்பளம் வழங்கப்படுவதாக வஜிர அபேவர்தன சுட்டிக்காட்டினார்.

அனைத்து அரசியல் கட்சிகளும் தங்களது சொந்த அரசியல் வேறுபாடுகளை களைந்து நாட்டுக்காக உழைக்குமாறு ஜனாதிபதி கேட்டுக் கொண்ட வேளையில், குறுகிய அரசியல் இலாபங்களுக்காக சில அரசியல் கட்சிகள் அதற்கு எதிராக செயற்படுவது வருந்தத்தக்கது என அவர் குறிப்பிட்டார்.

சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு அழைத்துவரப்படுவது போது வேலைநிறுத்தப் போராட்டங்களினால் இடையூறு ஏற்படுமாயின் அது ஊழியர்களின் சம்பள அதிகரிப்பிலே தாக்கம் செலுத்தும் என வஜிர அபேவர்தன சுட்டிக்காட்டினார்.

அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களின் சம்பளம் ஒரே நேரத்தில் அதிகரிக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி மிகத் தெளிவாக தெரிவித்துள்ள நிலையில், தொழிற்சங்கங்கள் வீதிக்கு இறங்குவது வருத்தமளிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், அனைத்து தொழிற்சங்கங்களும் தமது அரசியல் விடயங்களை மறந்து நாட்டையும் தேசத்தையும் பற்றி சிந்தித்து வங்குரோத்து நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு சிந்தனையுடன் செயற்பட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன கேட்டுக்கொண்டார்.

# தாய், தந்தையுடன் முரண்பட்டு கொண்டு உயிரை மாய்த்துக்கொண்டார் இளைஞர்!

கொழும்பு, நவ. 04

இராகலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஹரஸ்பெத்த பகுதியில் சுமார் ஆயிரம் அடி உயரம் கொண்ட தர்பனா எல மலை அடிவாரத்தில் உடல் பாகங்கள் சிதைந்த நிலையில் உயிரிழந்த இளைஞரின் சடலத்தை இராகலை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் இராகலை ஹரஸ்பெத்த பகுதியில் வசித்த மலிந்த தில்ஷான் (வயது-24) என அடையாளம் காணப்பட்டுள்ளதாக சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்ட மலிங்க தில்ஷான் தாய், தந்தையரை தாக்கிச் சண்டையிட்டு, எங்காவது சென்று உயிரை மாய்த்துகொள்ளதாக கூறிவிட்டு நேற்று முன் தினம் மாலை வீட்டை விட்டு வெளியேறியுள்ளதாக பெற்றோர் தெரிவித்தனர்.

இதையடுத்து குறித்த இளைஞனின் பெற்றோர் இராகலை பொலிஸ் நிலையத்திற்கு சென்று தனது மகன் மது அருந்திவிட்டு தங்களைத் தாக்கிவிட்டு கோபத்தில் வீட்டைவிட்டுச் சென்றதாக முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த நிலையில் நேற்று மாலை இளைஞரின் வீட்டாருக்கு தொலைபேசி அழைப்பு ஒன்று வந்துள்ளது. அந்த அழைப்பில் அடையாளம் தெரியாத நபரின் சடலம் ஒன்று தர்பனா எல மலை அடிவாரத்தில் கிடப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து குறித்த தகவலை பெற்றோர் இராகலை பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்துள்ளனர். பின்னர் தர்பனா எல மலை அடிவாரத்திற்கு விரைந்த இராகலை பொலிஸார் அங்கு உடல் பாகங்கள் சிதைந்து உயிரிழந்த நிலையில் இளைஞரின் சடலத்தை மீட்டுள்ளனர்.

அதேநேரத்தில் உயிரிழந்திருப்பது தமது மகன் என பெற்றோரும் சடலத்தை அடையாளம் காட்டியுள்ளனர். (அ)

# பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கு தனியார்துறையின் யோசனை பட்ஜெட்டில்!

கொழும்பு, நவ. 04

பொருளாதாரத்தைப் பலப்படுத்த தனியார் துறையினர் முன்வைக்கும் யோசனைகளை பாதீட்டு திட்டத்தில் உள்வாங்க எதிர்பார்ப்பதாகவும், அதற்காக ஒவ்வொரு துறைகளையும் தனித்தனியாக ஆராய விருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தனியார்துறை நிறுவனங்களின் பிரதானிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடியிலிருந்து மீண்டு, வளர்ச்சிப் பாதையில் பயணிப்பதை நோக்காகக் கொண்ட மறுசீரமைப்பு வேலைத்திட்டம் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் தனியார் துறை பிரதானிகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தையில் கவனம் செலுத்தப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது அரச வருமானம் மற்றும் செயற்திறனைப் பலப்படுத்தல், முதலீட்டாளர்களை ஈர்த்தல், சுற்றுலாத்துறை, ஆடைக் கைத்தொழில் உள்ளிட்ட பல்வேறு துறைகளையும் ஊக்குவிக்கும் யோசனைகளை தனியார் நிறுவன பிரதானிகள் இதன்போது ஜனாதிபதியிடம் கையளித்துள்ளனர்.

தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்ட பின்னர் முன்னெடுக்கும் திட்டங்கள், பல்வேறு துறைகளிலுள்ள பிரச்னைகளுக்கான தீர்வுகள் ஆகியன குறித்தும் இந்த முறை பாதீட்டு திட்டத்தில் கவனம் செலுத்துமாறும் ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

தனியார்துறையினர் முன்வைத்த யோசனைகள் தொடர்பில் கவனம் செலுத்துவதாகவும், எதிர்வரும் நாட்களில் ஒவ்வொரு துறை தொடர்பிலும் தனித்தனியே கலந்துரையாட எதிர்பார்த்திருப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (அ)

# 14 வயது சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம் பாட்டன் உள்ளிட்ட உறவினர்கள் மூவர் கைது

கொழும்பு, நவ. 04

மொரகஹஹேன பிரதேசத்தில் 14 வயதுச் சிறுமியை தொடர்ந்து பாலியல் துஷ்பிரயோகம் செய்த சிறுமியின் பாட்டனார் உள்ளிட்ட குடும்ப உறவினர்கள் மூவரை மொரகஹஹேன பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட சிறுமி பெற்றோரின் பராமரிப்பின்றி ஹொரண மொரகஹஹேன பிரதேசத்தில் தனது பாட்டியுடன் வசித்து வந்துள்ளார்.

குறித்த சம்பவத்தில் சிறுமியின் 80 வயதுடைய பாட்டனாரும் உறவுமுறையான இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் சிறுமியின் சித்தப்பா முறையான ஒருவரும் பாடசாலை மாணவன் ஒருவரையும் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக மொரகஹஹேன பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# காலாவதியான கல்வி முறை நவீனமயமாக்கப்படவேண்டும்

## சஜித் பிரேமதாஸ கோரிக்கை

கொழும்பு, நவ. 04

நாட்டில் கல்வி பற்றி பேசும் போது பெண்களின் கல்விக்கு விசேட கவனம் செலுத்த வேண்டும். பெண்களின் கல்விக்கு பக்கபலத்தை அளிப்பது பொருளாதாரத்தை வலுப்படுத்தும், உற்பத்தித் திறனை அதிகரிக்கும். அதனூடாக சமூக மற்றும் பொருளாதார உரிமைகள் பெண்களிடம் வலுப்பெறும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நுகேகொடை புனித ஜோசப் மகளிர் கல்லூரியில் நேற்று நடைபெற்ற கடேற் வாத்தியக் குழுவை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்கள் தொகையில் 52 சதவீதமாக இருக்கும் பெண் தலைமுறையை நாம் மறந்துவிடக்கூடாது. பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் முறை நமது நாட்டில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா என்பதுதான் பிரச்னைக்குரிய விடயம். இங்கு பெண் பிள்ளைகளின் கல்விக்கு விசேட செயற்திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும். அறிவை மையமாக கொண்ட பொருளாதாரம் குறித்து பேசினாலும் அது பிரயோக ரீதியாக யதார்த்தமான ஒன்றாக இருக்க வேண்டும்.

நாடு வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டு வரும் வேளையில் நமது நாட்டில் காலாவதியான கல்வி முறை நவீனமயமாக்கப்பட வேண்டும். மனப்பாட கல்வியைத் தவிர்த்து பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் கல்வி முறை உருவாக்கப்பட வேண்டும். ஆங்கில மொழி, தகவல் தொழிநுட்ப கல்வியை முதலாம் தரத்தில் இருந்தே புகட்ட வேண்டும். இந்த பாடங்கள் கட்டாயமாக்கப்படவேண்டும்.

புதிய அபிவிருத்தி எண்ணக்கருக்கள் மூலம் நாம் முன்னோக்கிச் செல்லவேண்டும். புதிய பாடத்திட்டத்திற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். கல்விக்காக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இருந்து எவ்வளவு பணம் ஒதுக்கினாலும் புதிய வேலைத்திட்டம் ஏதும் இல்லை என்றால் அந்த பணம் பலனளிக்காது-என்றார். (அ)

# யாழில் பார்வைக் குறைபாடுடைய பொலிஸாருக்கு மூக்குக் கண்ணாடி

யாழ்ப்பாணம், நவ. 04

யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களில் பார்வை குறைபாடுடைய பொலிஸாருக்கு மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு இன்று காலை 9மணிக்கு யாழ்ப்பாண பொலிஸ் நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

லயன்ஸ் கிளப்பின் அனுசரணையில் யாழ்ப்பாண மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத்வின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் 400 இற்கும் மேற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கண்ணாடி வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய புலனாய்வுப் பிரிவுடன் இணைந்து புதிய சமூக புலனாய்வுப் பிரிவு அமைப்பு

கொழும்பு, நவ. 04

தேசிய புலனாய்வுப் பிரிவுடன் இணைந்ததாக புதிய சமூக புலனாய்வுப் பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் அதன் செயற்பாடுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

பாடசாலை வகுப்புகளில் இடம்பெறும் பல்வேறு சீர்கேடுகளைத் தடுக்கப் புதிய புலனாய்வுப் பிரிவின் ஊடாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த திட்டத்தை இந்த ஆண்டு ஆரம்பித்துள்ளோம். இதன்படி, பாடசாலைகளில் இடம்பெறும் தவறான செயல்கள் மற்றும் போதைப்பொருள் அச்சுறுத்தல்களை குறைப்பதற்கும் அவற்றை ஒழிப்பதற்கும் இந்தப் புதிய புலனாய்வுப் பிரிவு செயற்படும்-என்றார். (அ)

# மீண்டும் ராஜபக்ஷக்களுடன் சேர்ந்து செயற்படுவதில்லை!

## உதய கம்மன்பில திட்டவட்டம்

கொழும்பு, நவ. 04

**ராஜபக்ஷக்களின் முறையற்ற செயற்பாடுகளினால்தான் நாடு வங்குரோத்து நிலையடைந்ததுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில குற்றம் சுமத்தியுள்ளதுடன் மீண்டும் ராஜபக்ஷக்களுடன் இணைந்து செயற்படப்போவ தில்லை எனவும் தெரிவித்தார்.**

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

பொதுஜன பெரமுனவின் தலைமைகள் கட்சியின் அடிப் படைக் கொள்கைக்கு எதிராக செயற்பட்டதால் பொதுஜன பெரமுனவிலிருந்து வெளியேறி பங்காளி அரசியல் தரப்பினரை ஒன்றிணைத்து கூட்டணியாக செயற்படுகிறோம்.

இந்நிலையில், எதிர்வரும் தேர்தல்களில் எமது கூட்ட ணியை முன்னிலைப்படுத்தி போட்டியிடுவோம். அதே வேளை பொதுஜன பெரமுனவு டன் மீண்டும் இணையும் நோக் கம் எமக்கில்லை. ராஜபக்ஷர்க ளுடன் ஒன்றிணையப்போவ தில்லை.



எனவே எதிர்வரும் 2024ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள தேசிய தேர்தல்களில் எமது கூட் டணியை முன்னிலைப்படுத்தி போட்டியிடுவோம் என்பதில் உறுதியாக இருக்கின்றோம்.

மறுபுறம் பொதுஜன பெர முனவின் அரசியல் நிலைப்பாடு தற்போது கேள்விக்குள்ளாக் கப்பட்டுள்ளது.

ஆகவே அவர்கள் ஐக்கிய தேசிய கட்சியுடன் கூட்டணிய மைத்து போட்டியிடலாம்-என் றார். (அ)

# புதிய அரசியல் பயணத்துக்காக நாட்டு மக்கள் தயாராகவேண்டும்

## விமல் வீரவன்ஸ அழைப்பு

கொழும்பு, நவ. 04

புதிய அரசியல் பயணத்துக்கு மக்கள் தயாராக வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட பொதுஜன பெரமுன கட்சியி னர் தற்போது கர்மவினையை அனுபவித்து வருகின்றனர்.

கூட்டணியாக செயற்படும் போது பங்காளிக் கட்சிகளின தும் ஆலோசனையைப் பெற்று அதற்கமைய செயற்படுமாறு ஜனாதிபதிக்கு நாமல் ராஜபக்ஷ அறிவுரை வழங்கியுள்ளார்.

ஆனால், முன்னாள் ஜனாதி பதியான கோட்டாபய ஆட்சி காலத்தில் கூட்டணி அரசியல் கலாசாரம் பற்றி அவர்களுக்கு தெரிந்திருந்தால் கோட்டாபய வின் ஆட்சிதான் இன்றும் நீடித்



திருக்கும்.

ஜனாதிபதிக்கு நாமல் அறிவு ரையை கேட்கும்போது சிரிப்பு தான் வந்தது. ஏனெனில் அது தான் கர்மவினை.

ஜனாதிபதித் தேர்தலை எப்படியாவது ஒத்திவைத்து ஆட்சியை தக்கவைப்பதற்கு ஜனாதிபதி முயற்சிக்கின்றார். அதற்காக சலுகை அறிவிப்புகள் வெளிவருகின்றனர்.

இப்படியான தற்காலிக நடவடிக்கைகளால்தான் நாடு நாசமானது எனவும் ஆகவே மக்கள் புதிய அரசியல் பயணத் துக்கு தயாராக வேண்டும்-என் றார். (அ)

# ஏ-07 பிரதான வீதியின் ஒரு பகுதி தாழிறக்கம்

கொழும்பு, நவ. 04

கனமழை காரணமாக பிரதான வீதி ஒன்றின் ஒரு பகுதி திடீ ரென தாழிறங்கியுள்ளது.

கினிகத்ஹேன பிரதேசத்தில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கடும் மழையினால் ஹற் றன்-கொழும்பு ஏ-07 பிரதான வீதியின் ஒரு பகுதியே இவ்வாறு தாழிறங்கியுள்ளது.

இதன் காரணமாக குறித்த இடத்தில் போக்குவரத்து ஒரு மருங்கிற்கு மட்டுப்படுத்தப்பட் டுள்ளதாக கினிகத்தேன பொலிஸார் தெரிவித்தனர்.

ஹற்றன் கொழும்பு பிரதான வீதியில் கினிகத்ஹேன கோவிலை அண்மித்த பிரதான வீதியின் ஒரு பகுதி இவ்வாறு தாழிறங்கியுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று காலை 08 மணியள வில் இந்த தாழிறங்கல் ஆரம்ப மானதாகவும், இதற்கு முன்ன ரும் இதே இடத்தில் தாழிறக் கம் ஏற்பட்டிருந்ததாகவும் தெரி விக்கப்பட்டது.

வீதியில் வாகனங்களைச் செலுத்தும்போது அவதானத்து டன் இருக்குமாறு சாரதிகளை பொலிஸார் கேட்டுள்ளனர். (அ)

# நாயை கொலை செய்த பெண்ணுக்குப் பிணை!

கொழும்பு, நவ. 04

125,000 ரூபாய் பெறுமதி யான "ஷிட்சு" நாயை திருடி கொலை செய்த குற்றத்தை ஒப் புக்கொண்ட வீட்டுப் பெண்ணை 100,000 ரூபா சரீரப் பிணையில் விடுவிக்க நுகேகொட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஹாலி-எல உனகொல்ல வத்த மொரகொல்ல பகுதியைச் சேர்ந்த சுபா என்ற ஞானசேகரம் சுபாஷினி என்பவரே இவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்டுள் ளார்.

நுகேகொட, மிரிஹான பிர தேசத்தை சேர்ந்த மேகல இரு கல்பண்டார என்பவர் செய்த முறைப்பாட்டின் பிரகாரம், மிரிஹான பொலிஸ் பிரதான பரிசோதகர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

வீட்டில் வளர்க்கப்பட்ட நாயை வேண்டுமென்றே திருடி ஹாலி-எல பகுதிக்கு கொண்டு சென்று கொலை செய்ததன் மூலம் தண்டனைச் சட்டம் மற் றும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் தண்டனைக்கு ரிய குற்றத்தை குற்றம் சாட்டப் பட்டவர் செய்ததாக மூன்று குற் றச்சாட்டுகள் முன்வைக்கப்பட் டுள்ளன.

இது தொடர்பான வழக்கு நுகேகொட பதில் நீதவான் சுனிதா நாணயக்கார முன்னிலை யில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதுடன், சந்தேக நபர் அடையாள அணிவகுப் பிற்கு ஆஜர்படுத்தப்பட்டார்.

நாயைத் திருடிக்கொண்டு அவர் பயணம் செய்த பஸ்ஸின் சாரதி யால் அவர் அங்கு அடையாளம் காணப்பட்டார்.

புகார்தாரரும் அவரது சகோ தரியும் மருத்துவ சிகிச்சைக்காக ஏப்ரல் 13 ஆம் திகதி வீட்டை விட்டு வெளியேறினர்.

அவர் வீடு திரும்பியபோது, குற்றம் சாட்டப்பட்ட பணிப் பெண் வீட்டில் இல்லை, வளர்ப்பு நாயும் வீட்டில் இல்லை. வீட் டில் இருந்த சிசிரிவி காட்சிகளை ஆய்வு செய்ததில், சந்தேகத்திற் குரிய பணிப்பெண் ஒரு பெரிய பையுடன் வீட்டை விட்டு வெளியே செல்வது பதிவாகி யுள்ளது.

அவர் புறக்கோட்டை பேருந்து நிலையத்திற்கு வந்து ஹாலி-எல செல்லும் பஸ்ஸில் பயணித்ததாக தகவல் வெளியா கியுள்ளது. குற்றம் சாட்டப்பட்ட பெண் தனது பஸ்ஸில் ஏறி நாயு டன் பயணித்ததாக பஸ் சாரதி சாட்சியமளித்துள்ளார்.

பின்னர், குற்றம் சாட்டப் பட்ட பெண் தன் மீதான குற்றச் சாட்டுகளை ஒப்புக்கொண்டார். இந்த உண்மைகளை பரிசீலித்த பதில் நீதவான், 100,000 ரூபா சரீரப் பிணையில் அவரை விடு விக்க உத்தரவிட்டார். (அ)

# சர்வதேச காலநிலை பல்கலையை அமைக்க கொத்மலையை அண்மித்து 600 ஏக்கர் காணி

கொழும்பு, நவ. 04

சர்வதேச காலநிலை பல்க லைக்கழகத்தை நிர்மாணிக்க கொத்மலை நீர்த்தேக்கத்தை அண்டிய 600 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டிருப்பதாக ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இலங்கை காலநிலை அனர்த் தங்களுக்கு ஈடுகொடுக்கவும், பசுமை பொருளாதார மாற்றத் திற்கும் தேவையான திட்டங் களை முன்னெடுத்துள்ளதாக வும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நேற்று முன் தினம் நடைபெற்ற முதலா வது சர்வதேச காலநிலை மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த வருடத்தில் தான் காலநிலை செழிப்புத் திட்டத்தை முன்வைத்திருந்ததாகவும், இவ் வருடத்துக்கான கோப் 28 மாநாட்டில் நிகர பூஜ்ஜிய உமிழ் வுத் திட்டத்தை முன்வைக்க எதிர்பார்த்திருப்பதாகவும் ஜனா திபதி தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரி வித்த ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்க,

பொருளாதார நெருக்கடியி லிருந்து மீண்டு வந்து, நாங்கள் உருவாக்க முற்படும் பொருளா தாரம், போட்டித்தன்மை மிக்க தாகவும், டிஜிற்றல் மற்றும் வலு சக்தி, பசுமை துறைகளை மையப் படுத்தியதாகவும் அமைந்திருக் கும் என்று தெரிவித்தார்.

இதுகுறித்து வரவு செலவு திட்டத்தின் பின்னர் அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் கலந்தாலோசிக்க எதிர்பார்த்தி ருப்பதாகவும் ஜனாதிபதி கூறி னார்.

மேற்படி வழிமுறையின் ஊடாக மாத்திரமே இலங்கையை அபிவிருத்தி செய்ய முடியுமென் றும், விவசாயத்துறையை நவீன மயப்படுத்தல், சுற்றுலா வர்த்த கத்தை விரிவுபடுத்தல் மற்றும் துரிதப்படுத்தல் ஊடாக அதனை சாதிக்க முடியும் என்ப தோடு, அதற்கான சாத்தியங் களை அறிந்துகொள்ள வேண் டும் என்றும் இலங்கை சிறிய நாடு என்பதால் பல்வேறு நன் மைகள் கிட்டும் என்றும் ஜனா திபதி தெரிவித்தார். (அ)

# பங்களாதேஷிடமிருந்து இலங்கைக்கு 58,000 அமெ. டொலர் மருத்துவ உதவி!

கொழும்பு, நவ. 04

பங்களாதேஷிடமிருந்து இலங்கைக்கு சுமார் 58000 அமெரிக்க டொலர் பெறுமதி யான மருத்துவ உதவி எதிர்வ ரும் வாரத்தில் வழங்கப்படவுள் ளதாக தெரியவந்துள்ளது.

அதன்படி, அவற்றில் இந் நாட்டுக்கு அத்தியாவசியமான 54 வகையான மருந்துகள் குறிப் பாக புற்றுநோய் மற்றும் சிறுநீ ரக மருந்துகள் உள்ளதாக இலங்கை பங்களாதேஷ் தூது வர் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சர் வைத்தி யர் ரமேஷ் பத்திரன மற்றும் இலங்கை பங்களாதேஷ் தூ துவர் தாரிக் மிட் அரிபுல் இஸ் லம் ஆகியோருக்கு இடையி லான சந்திப்பு அண்மையில் சுகாதார அமைச்சில் இடம்பெற் றது.

இதன்போதே மேற்கண்ட வாறு தெரிவிக்கப்பட்டது.

இந்த மருத்துவ உதவித் தொகைக்கு மேலதிகமாக பங்க ளாதேஷ் சுகாதார அமைச்சின் ஊடாக ஒரு மில்லியன் அமெ ரிக்க டொலர் பெறுமதியான மற்றுமொரு மருத்துவ உதவிப் பங்கும் எதிர்காலத்தில் பெறப் பட உள்ளதாகவும் தூதுவர் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கைக்கு உடனடியாகப் பதிலளித்து இந்த மருந்துகளை நன்கொடையாக வழங்குவதற் குத் தேவையான நடவடிக்கை களை எடுத்த பங்களாதேஷ் தூது வர் மற்றும் பங்களாதேஷ் அர சாங்கத்திற்கு தனது விசேட நன்றிகளைத் தெரிவித்துக் கொள் வதாக சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார். (அ)

# இரத்தினபுரியில் வீடொன்றில் தீ விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, நவ. 04

இரத்தினபுரி - மல்வல பகுதி யில் உள்ள வீடொன்றில் ஏற் பட்ட தீ விபத்தில் ஒருவர் உயி ரிழந்துள்ளார்.

வீடு ஒன்று தீப்பற்றி எரிவ தாக இரத்தினபுரி பொலிஸா ருக்கு கிடைத்த தகவலின் அடிப் படையில் தீயணைப்பு பிரிவி னால் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

தீ விபத்தில் வீட்டின் இரண்டு அறைகள் எரிந்து நாசமாகியுள் ளதுடன், குறித்த வீட்டில் தங்கி யிருந்த ஒருவர் தீயில் சிக்கி உடல் கருகி உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் 54 வயது டைய ஒருவரே உயிரிழந்துள்ள தாக பொலிஸார் தெரிவிக்கின்ற னர்.

உயிரிழந்த நபர் மனைவி மற்றும் பிள்ளைகளை பிரிந்து தனியாக வசித்து வந்ததாக குறிப்பிடப்படுகிறது.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்பட வில்லை என பொலிஸ் தலைமை யகம் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# தம்பிலுவில் தம்பையா சுவாமிகள் சமாதி ஆலயம் கடலரிப்பால் சேதம்!





**காரைதீவு, நவ. 04**

**திருக்கோவில் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள மிகவும் மோசமான கடலரிப்பை அடுத்து நேற்று முன் தினம் வியாழக்கிழமை அதிகாலை தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுல ஸ்தாபகர் அமரர் தம்பையா சுவாமிகளின் சமாதி ஆலயம் கடலுக்குள் காவு கொள்ளப்பட்டுள்ளது.**

**தம்பையா சுவாமிகளின் சமாதி ஆலயம் சேதமாக்கப்பட்டு சமாதியும், சிவன்சிலையும் கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டுள்ளன.**



கடந்த சில நாட்களாக அங்கு இடம்பெற்று வந்த மோசமான கடலரிப்பால் திருக்கோவில் சித்திர வேலாயுதசுவாமி ஆலய சூழல் மற்றும் தம்பையா சமாதி ஆலயமும் கடலுக்குள் காவு கொள்ளப்படும் பாரிய அபாயம் நிலவிவந்தது.

குருகுலப் பணிப்பாளர் கண.இராஜரத்தினம் அறிந்து உடனடியாக பிரதேச செயலாளருக்கும், கடலோர பாதுகாப்பு திணைக்கள மாகாணப் பணிப்பாளர் பொறியியலாளர் கே

துளசிதாசனுக்கும் அறிவித்திருந்தார் .

மாகாண பணிப்பாளர் எந்திரி கே.துளசிதாசன் உடனடியாக செயல்பட்டு 100 மண் மூடைகளை ஏலவே பரப்பி, எதிர்வரும் ஆறாம் திகதி திங்கட்கிழமை கல்லணை போடுவதற்கு தயாராக இருந்த வேளையில், இந்த அனர்த்தம் இடம் பெற்றுள்ளது.

அந்த பிரதேசத்திலுள்ள தென்னந்தோப்பில், இதுவரை சுமார் 200 தென்னை மரங்கள் மற்றும் 12 கிணறுகள் இதுவரை கடலரிப்பால் கொள்ளப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மஹ்மூத் மகளிர் கல்லூரியில் நடமாடும் நூலகம் திறந்துவைப்பு

அம்பாறை, நவ. 04

அரசாங்க சுற்றறிக்கைக்கு அமைய நூலக வாரத்தினை முன்னிட்டு தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி "நினைத்த இடத்திற்கு செல்லவும் வாசிப்பதற்கு ஒரு புத்தகத்தை எடுக்கவும்" எனும் தொனிப்பொருளில் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் நூலக பொறுப்பாளர் ஏ.எல். நளீம் தலைமையில் பச்சை வீடு கூடத்தில் மிக சிறப்பான நெறிப்படுத்தலில் நடைபெற்ற நடமாடும் நூலகத்திறப்பு நிகழ்வில் கல்லூரியின் அதிபர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்தர்.

நடமாடும் நூலகத்தில் சமயம், அகராதிகள், நாவல், கல்வி, அறிஞர்கள், பாடப் புத்தகத்துடன் தொடர்பான நூல்கள், செய்தி பத்திரிகைகள், கவிதைகள், சஞ்சிகைகள் என பல் துறை சார்ந்த நூல்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இடைவேளை நேரத்தில் கல்லூரி சமூகத்தினர் பயன்பெறும் வகையிலும் வாசிப்பினை மாணவி மத்தியில் சமூக மயப்படுத்துவற்கான ஏற்பாடுகள், ஆலோசனைகள், வழிகாட்டல்களினை கல்லூரியின் நூலக பொறுப்பாளர் ஏ.எல். நளீமினால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் உதவி அதிபர்களான ஏ.எச் நதிரா, என்.டி நதீகா, எம்.எஸ் மனூனா, ஆசிரியர்கள், நூலக உத்தியோகத்தர்கள், நூலக சங்கத்தின் மாணவிகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர். (அ)






# கல்முனையில் 200 மாணவர்களுக்கு இலவச மூக்குக்கண்ணாடி வழங்கல்

அம்பாறை, நவ. 04

கல்முனை றோட்டரிக்கழகத்தின் 200 மாணவர்களுக்கு இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட 58 மாணவர்களுக்கு மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வு கழகத்தலைவர் ரொட்டரியன் ஏஎல்ஏ. நாசர் தலைமையில் கல்முனை உவெஸ்லி உயர்தர கல்லூரி மண்டபத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இதில் கழகத்தின் முன்னாள் தலைவர்கள் றோட்டரியன் எஸ். புஷ்பராசா, றோட்டரியன் மு. சிவபாதசுந்தரம், றோட்டரியன் வி. விஜயசாந்தன், றோட்டரியன் ந. றதீசன் தலைவர் 2024/2025 மற்றும் அங்கத்தவர் றோட்டரியன் எம். அமிர்தசங்கர் ஆகியோரும் பங்குபற்றினர். (அ)

# இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்துக்கு டயக்கோனியா அமைப்பின் உயர்அதிகாரி விஜயம்

அம்பாறை, நவ. 04

டயக்கோனியா அமைப்பின் ஆசியப் பிராந்தியத்தின் ஐந்து நாடுகளுக்கும், மத்திய கிழக்கில் உள்ள மூன்று நாடுகளுக்கும் பொறுப்பான தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த டயக்கோனியா அமைப்பின் பிராந்திய தொடர்பாடல் அதிகாரி திருமதி வனீவ்னா தங்சத்தியன் ரப்ஹப் (ரீனா) கல்முனை கல்வி வலய கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபர் ஏ.ஜி.எம். றிசாத்தின் அழைப்பின் பேரில் கடந்த 2ஆம் திகதி திகதி பாடசாலைக்கு வருகை தந்தார்.



முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி மற்றும் டயகோனியா அமைப்பின் ஆதரவில் புனர் நிர்மாணம் செய்யப்பட்ட சிறுவர் சமாதான பூங்கா, மற்றும் பாடசாலையின் ஒரு பகுதியாக இயங்கி வரும் "கிரீன்வீச்" ஆங்கில பாலர் பாடசாலை போன்றவற்றையும் பார்வையிட்டதோடு, கடந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட வேலை திட்டங்களின் முன்னேற்ற நிலைமைகள் பற்றியும் அவர் பார்வையிட்டார்.

இந்நிகழ்வில் டயக்கோனியா நிறுவனத்தின் இலங்கைக்கான செயற்திட்ட முகாமையாளர் திருமதி நிஷாந்தினி மற்றும் பாடசாலையின் பிரதி அதிபர், பகுதி தலைவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 34 ஆவது விளையாட்டுப் போட்டி நாளை

அம்பாறை, நவ. 04

இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அம்பாறை மாவட்டத்தின் 34ஆவது மாவட்ட மட்ட இளைஞர் விளையாட்டுப்போட்டி அம்பாறை மாவட்ட இளைஞர் சேவை உத்தியோகத்தர் முபாரக் அலி தலைமையில் நாளை காலை 08.00 மணி தொடக்கம் மாலை 06.00 மணிவரை சுவட்டு மைதான நிகழ்ச்சிகளாக நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்நிகழ்வு அம்பாறை மாவட்டத்தில் காணப்படும் 20 பிரதேச செயலகங்களில் நடத்தப்பட்ட பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற விளையாட்டு வீர, வீராங்கனைகளின் பங்கேற்புடன் அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

இப்போட்டியில் வெற்றி பெற்று, முதலாம் இடங்களைப் பெறும் இளைஞர் விளையாட்டு வீர, வீராங்கனைகள் 34ஆவது தேசிய இளைஞர் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளவுளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# காஸாவை சுற்றிவளைத்தது இஸ்ரேலிய இராணுவம்!

டெல்அவிவ், நவ. 04

**காஸாவுக்குள் படிப்படியாக நுழைந்த இஸ்ரேல் இராணுவம் தற்போது காஸாவை சுற்றிவளைத்துள்ளதாக அறிவித்துள்ளது.**

**காஸாவின் ஹமாஸ் படையினருக்கும் இஸ்ரேல் இராணுவத்துக்கும் கடந்த அக். 7 ஆம் திகதி போர் தொடங்கியது. காஸாவுக்குள் இஸ்ரேல் இராணுவம் நுழைந்துள்ளது.**

இதுவரை இல்லாத அளவுக்கு இஸ்ரேலில் தாக்குதலை மேற்கொண்ட ஹமாஸ் படையினருக்கு பதிலடியாக காஸாவை முற்றிலும் அளிப்பதே நோக்கம் என்று இஸ்ரேல் தீவிரமான தாக்குதலை மேற்கொண்டு வருகிறது.

இந்த போரில் பலஸ்தீனியர்கள் தரப்பில் உயிரிழப்பு 9 ஆயிரத்து 61 ஆக அதிகரித்துள்ளது. இதில் 3 ஆயிரத்து 760 பேர் குழந்தைகள், 2 ஆயிரத்து 326 பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் காஸா நகரம் முழுவதையும் சுற்றி வளைத்துள்ளதாக இஸ்ரேல் ராணுவம் கூறியுள்ளது. இதனால் இஸ்ரேல் தாக்குதலின் தீவிரம் மேலும் அதிகரிக்கலாம் என்று தெரிகிறது.



இஸ்ரேல் தரப்பில் இதுவரை 335 இராணுவத்தினர் உயிரிழந்தனர் என்று தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காஸாவை சூழ்ந்த படைகளை பைகளில் திருப்பி அனுப்புவோம்!

## ஹமாஸ் அமைப்பு எச்சரிக்கை

காஸா, நவ. 04

காஸாவை சூழ்ந்த இஸ்ரேல் படைகளை பைகளில் திருப்பி அனுப்புவோம் என ஹமாஸின் இராணுவப் பிரிவான இஸ் அட்-டின் அல்-காசம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

காஸா மீதான தரைவழி தாக்குதலை இஸ்ரேல் இராணுவம் தீவிரப்படுத்தியுள்ளது. இதனால் போர் தீவிரமடையும் அபாயம் அதிகரித்துள்ளது. வடக்கு காஸாவில் உள்ள பலஸ்தீனியர்கள் உடனடியாக வெளியேறுமாறு இஸ்ரேல் பலமுறை எச்சரித்தது. ஆயிரக்கணக்கான பலஸ்தீனியர்கள் அப்பகுதியை விட்டு வெளியேறவில்லை. அதோடு, போர் நிறுத்தம் என்பது இஸ்ரேல், ஹமாஸிடம் சரணடைவதற்கு சமமானது. ஹமாஸுக்கு எதிரான போரில் வெற்றிபெறும் வரை இஸ்ரேல் போராடும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறியிருந்தார்.

இந்த நிலையில், இது தொடர்பாக இஸ்ரேல் இராணுவத்தின் செய்தி தொடர்பாளர் டானியல் ஹகாரி, இஸ்ரேல் இராணுவத்தினர் காஸா பகுதியை சுற்றி வளைத்து விட்டனர் என்றும் இனி போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடம் கிடையாது எனவும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே காஸாவில் உள்ள அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் ராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதலில் பாலஸ்தீனர்கள் பலர் கொல்லப்பட்டதாக ஹமாஸ் அமைப்பு குற்றம் சாட்டியிருந்தது. இதையொட்டி, காஸாவை சூழ்ந்த இஸ்ரேல் ராணுவப் படை வீரர்களை 'பைகளில் திருப்பி அனுப்புவோம்' என ஹமாஸின் ராணுவப் பிரிவான இஸ் அட்-டின் அல்-காசம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

(ஐ)




# மேற்கு ஐரோப்பா பகுதியை உலுப்பியது சியரான் புயல்!

## ஆறு பேர் உயிரிழந்தனர்

பாரிஸ், நவ. 04

மேற்கு ஐரோப்பாவை மணிக்கு 200 கிலோ மீற்றர்கள் வேகத்தில் கடந்த 'சியரான்' புயலினால் பரவலாக அழிவுகள் ஏற்பட்டுள்ளன. பிரான்ஸில் இருவர் உட்பட ஆறு பேர் உயிரிழந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பல பத்துப் பேர் காயமடைந்துள்ளனர்.

வீதிப் போக்குவரத்துகள் மற்றும் விமானம், பயணிகள் படகுச் சேவைகள் ஸ்தம்பிதமடைந்தன. வெள்ளம் பாதித்த பகுதிகளில் இருந்து மக்கள் வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.

பிரான்ஸின் வட மேற்குக் கரையோரத்தில் காற்றின் வேகம் இதுவரை பதிவான அளவுகளைத் தாண்டி உச்சமாக மணிக்கு 207 கிலோமீற்றர்களாகப் பதிவாகியுள்ளது என்று வானிலை அவதான நிலையம் அறிவித்திருக்கிறது. வடமேற்கு கடலில் பத்து மீற்றர்கள் முதல் 20 மீற்றர்கள் வரையான உயரத்துக்கு அலைகள் எழுந்து ஆர்ப்பரித்துள்ளன.

ஜேர்மனி, நெதர்லாந்து, ஸ்பெயின், பெல்ஜியம் ஆகிய நாடுகளில் மரங்கள் முறிந்தும் சாய்ந்தும் வீழ்ந்த சம்பவங்களில் தலா ஒவ்வொருவர் உயிரிழந்தனர். இந்த ஆண்டு நவம்பரில்தொடங்கிவிட்ட பிறகும் மரங்கள் இலைகளை உதிர்ப்பது தாமதமடைந்துள்ளது. இலையுதிர்காலம் பிந்தியதில் மரங்கள் இன்னமும் இலை குழைகள் நிறைந்து காணப்படுகின்றன. இதனாலேயே அவை காற்றின் வேகத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் சாய்ந்து பெருமளவில் அழிவடைந்துள்ளன என்று பருவநிலை நிபுணர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

(ஐ)

# வடக்கு இஸ்ரேல் மீது லெபனானும் தாக்குதல்

டெல் அவிவ், நவ. 04

லெபனானில் இருந்து இஸ்ரேல் நாட்டின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள கிரியாத் ஷ்மோனா நகரின்மீது ஏவுகணை தாக்குதலை மேற்கொண்டதாக ஹமாஸ் அமைப்பினர் தெரிவித்துள்ளனர். ஒரே நேரத்தில் சுமார் 12 ஏவுகணைகளை ஹமாஸ் ஏவியுள்ளது. இந்த தாக்குதலில் இஸ்ரேலை சேர்ந்த இரண்டு பேர் காயமடைந்துள்ளனர்.

இஸ்ரேல் - ஹமாஸ் போர் நடக்கிறது. தற்போது, காஸா நகரத்தை இஸ்ரேல் இராணுவம் சுற்றி வளைத்துள்ளது. இந்த நிலையில், ஹமாஸுக்கு ஆதரவாக லெபனானன் தாக்குதலை ஆரம்பித்துள்ளது.

காஸா வாழ் மக்களுக்கு எதிராக இஸ்ரேல் மேற்கொண்டு வரும் படுகொலை தாக்குதல்களுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் லெபனானில் இருந்து கிரியாத் ஷ்மோனா நகரை ஏவுகணை மூலம் தாக்கியதாக ஹமாஸ் தெரிவித்துள்ளது.



லெபனான் நாட்டில் இயங்கி வரும் ஹிஸ்புல்லா அமைப்பும் இஸ்ரேல் மீது தாக்குதல் மேற்கொண்டு வருகிறது. இதற்கு இஸ்ரேல் பதில் தாக்குதல் நடத்தி வருகின்றது.

(ஐ)

# அந்தாட்டிக்காவில் ஆராய்ச்சி தளம் அமைக்கின்றது சீனா!

பீஜிங், நவ. 04

அந்தாட்டிக்காவில் புதிய ஆராய்ச்சி தளம் ஒன்றை கட்டியெழுப்ப சீனா திட்டமிட்டுள்ளது.

இராஸ் கடலின் கடலோர பகுதியில் 5ஆவது ஆராய்ச்சி மையத்துக்கான கட்டுமான பணி மேற்கொள்ளப்படவுள்ளது. இந்த பணியை வருகின்ற 2024ஆம் ஆண்டு பெப்ரவரிக்குள் நிறைவு செய்வது என சீனா திட்டமிட்டுள்ளது.

இதனை அந்நாட்டில் இருந்து வெளிவரும் குளோபல் ரைம்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த கட்டுமான பணியுடன்கூட, அண்டார்டிகாவின் சுற்றுச்சூழலில் பருவநிலை மாற்றத்தினால் ஏற்பட கூடிய பாதிப்பு பற்றி ஆராய்ச்சி குழு ஆய்வு மேற்கொள்ளும். இதேபோன்று, உலகளாவிய பருவநிலை மாற்றத்தில் இந்த பகுதியின் பங்கு பற்றியும் ஆய்வு நடத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



கிழக்கு அந்தாட்டிக்காவில் அமையுவுள்ள புதிய தளத்துடன், செயற்கைக்கோள் நிலையம் ஒன்றும் மற்றும் கண்காணிப்பகமும் அமைக்கப்படும். அந்தாட்டிக்காவில் ஆய்வு தளம் கட்டுமான பணிக்காக 80 சீன மையங்களை சேர்ந்த 460 ஆராய்ச்சியாளர்கள் மற்றும் சரக்கு கப்பல் புறப்பட்டு சென்றுள்ளது.

(ஐ)

# நீதிமன்றத்தின் உத்தரவையும் மீறி தண்ணிமுறிப்பு குளத்தில் மீன்பிடி!

## வெலி ஓயாவிலிருந்து வருகை தந்தோர் தப்பி ஓட்டம் 15 மோ.சைக்கிள்களை கைப்பற்றினர் பொலிஸார்




முல்லைத்தீவு, நவ. 04

**தண்ணிமுறிப்பு குளத்தில் நீதிமன்ற உத்தரவையும் மீறி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இரண்டு மீனவர்கள் ஒட்டிசுட்டான் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில் மேலும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட பலர் தப்பிச் சென்றனர். அவர்கள் வருகை தந்த 15 மோட்டார் சைக்கிளும் ஒட்டுசுட்டான் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.**

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தண்ணிமுறிப்பு குளத்தில் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு தண்ணிமுறிப்பு நன்னீர் மீன்பிடி சங்கத்தினருக்கும், கிச்சிராபுரம் நன்னீர் மீன்பிடி சங்கத்தினருக்கும் மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் வெலிஓயா பகுதியிலிருந்து வருகைதரும் பெரும்பான்மை இனத்தைச் சார்ந்த மீனவர்கள் தொடர்ச்சியாக தண்ணிமுறிப்பு குளத்தில் எந்தவித அனுமதியுமின்றி அத்துமீறி சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறான பின்னணியில் தமிழ் மீனவர்களுக்கும் பெரும்பான்மையித்தை சேர்ந்த மீனவர்களுக்கும் தொடர்ச்சியாக முரண்பாடு தோன்றி வருகின்றது.

இவ்வாறு தண்ணிமுறிப்பு குளத்தில் கடந்த 05.08.2023 அன்று அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பெரும்பான்மையின மீனவர்கள் 38 பேரையும் அவர்கள் மீன்பிடிக்கு பயன்படுத்திய உபகரணங்களையும் சிறைப்படுத்திய குறித்த குளத்திற்கு உரித்தான மீனவர்கள் ஒட்டுசுட்டான் பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தனர்.

இந்நிலையில் பதிவு செய்யப்பட்ட ஹிச்சிராபுரம், தண்ணிமுறிப்பு நன்னீர் மீன்பிடிச் சங்கத்தைச் சேர்ந்த மீனவர்களை விசாரணைக்கு என அழைக்கப்பட்ட நிலையில் 17 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சமாதான சீர்குலைவு என்ற அடிப்படையில் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய நிலையில் தமிழ் மீனவர்கள் 17 பேர் மற்றும் பெரும்பான்மையின மீனவர்கள் 38 பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இறுதியாக நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில் அனுமதி இல்லாத பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மீனவர்கள் இனிமேல் குறித்த குளத்திற்கு மீன்பிடிப்பதற்கு வரமாட்டோம் என தெரிவித்ததன் அடிப்படையில் நீதிமன்றில் இருந்து விடுவிக்கப்பட்டனர்.

இந்த சூழலிலேயே குறித்த குளத்தில் நீதிமன்ற உத்தரவின் பின்னரும் தொடர்ச்சியாக பெரும்பான்மையின மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும் குறித்த விடயங்களை நேரில் உறுதிப்படுத்த ஊடகவியலாளர்களை குறித்த பகுதிக்கு அழைத்திருந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் குறித்த பகுதிக்கு ஊடகவியலாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டபோது அங்கு சுமார் 50 இற்கு மேற்பட்ட பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த மீனவர்கள் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

உடனடியாக பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கங்கத்துக்கும், ஒட்டுசுட்டான் பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்ட நிலையில் பொலிஸார் சுமார் இரண்டு மணித்தியாலங்களில் அவ்விடத்திற்கு வருகை தந்து அங்கு மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட இரண்டு மீனவர்களை கைது செய்தனர். ஏனையவர்கள் தப்பிச் சென்ற நிலையில் அவர்களுடைய 15 மோட்டார் சைக்கிள்களையும் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றனர்.

தண்ணிமுறிப்பு குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் வெலிஓயா மீனவர்களின் அத்துமீறல் நடவடிக்கையினால் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வருவதாக பல தடவைகள் அரச திணைக்களத்தினர், மற்றும் மீன்பிடி அமைச்சர் உள்ளிட்டவர்களுக்கும் எடுத்துரைத்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்காத நிலையிலேயே அத்துமீறி மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டு வருவதாக குறித்த பகுதி மீனவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். (அ)



# துணுக்காய் பிரதேச செயலகத்தில் சிறப்பாக நடந்த முதியோர் தினம்

முல்லைத்தீவு, நவ. 04

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலகத்தின் முதியோர் தின நிகழ்வுகள் நேற்று முன் தினம் துணுக்காய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

பிரதேச செயலகத்தின் முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தோர் கஜிந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக துணுக்காய் பிரதேச செயலாளர் ச.லதுமீரா அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

சிறப்பு விருந்தினர்களாக துணுக்காய் பிரதேச செயலக கணக்காய்வாளர் கு.சஜீபன், முல்லைத்தீவு மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் தசரத ராஜகுமாரன், பூநகரி சமூக சேவை உத்தியோகத்தர் ச. ரேணுகா ஆகியோரும்

கௌரவ விருந்தினர்களாக முல்லைத்தீவு தேசிய முதியோர் செயலக மாவட்ட இணைப்பாளர் ஜெயானந்தனும் மல்லாவி வர்த்தக சங்கத் தலைவர் தர்மலிங்கம் உள்ளிட்டவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

நிகழ்வில் மூத்தோர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (அ)

# மதுபானப் பாவனையால் நாட்டில் ஒரு நாளில் 40 பேர் அகால மரணம்!

கொழும்பு, நவ. 04

மதுபானப் பாவனையால் இலங்கையில் நாளொன்றுக்கு சுமார் 40 பேர் அகால மரணமடைவதாக மது மற்றும் போதைப் பொருள் தகவல் மையம் தெரிவித்துள்ளது.

மது அருந்துவதால் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 15,000 பேர் உயிரிழப்பதாக அந்த மையம் கூறியுள்ளது.

மதுவின் வருமானத்தை விட மதுவினால் நாட்டுக்கு ஏற்படும் பொருளாதார சேதம் அதிகம் என ஆய்வுகள் கூறுகிறது. கடந்த 2015ம் ஆண்டு மதுவின் வருமானம் 10,5,234 மில்லியன் ரூபாவாக இருந்தபோது அதில் மதுவால் அரசுக்கு ஏற்பட்ட பொருளாதார சேதம் ஆண்டு 119660 மில்லியன் ரூபாய் ஆகும் என கணக்கிடப்பட்டுள்ளது.

மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையத்தின் படி, மது ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு தடையாக உள்ளது மற்றும் 17 நிலையான வளர்ச்சி இலக்குகளில் 14 இலக்குகளுக்கு மதுபானம் தடையாகச் செயல்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எந்த வகையான மதுபானமும் மனித உடலுக்கு நல்லதல்ல என்பது அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளதுடன், மதுபானம் புற்றுநோய், சிரோசிஸ், சிறுநீரகம் மற்றும் இதய நோய்கள் போன்ற பல நோய்களை நேரடியாக பாதிக்கிறது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

சாலை விபத்துகள், பெண்களுக்கு எதிரான வன்முறைகள், குழந்தைகள் துஷ்பிரயோகம் போன்றவற்றுக்கு மதுபானம் முக்கிய காரணமாகிவிட்டதாக குறித்த மையம் கூறியுள்ளது.

# கிராம அலுவலர் ஆட்சேர்ப்பு பரீட்சை டிசெம்பரில் நடக்கும்

கொழும்பு, நவ. 04

கிராம அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான பரீட்சை டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் நடத்தப்பட்டு மூன்று மாதங்களுக்குள் நியமனங்கள் பூர்த்தி செய்யப்படும் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

சுமார் 3000 கிராம அலுவலர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்தார். மேலும், சட்டரீதியாக அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் தேர்வில் பங்கேற்க வாய்ப்பு வழங்கப்படும் என்றும் பிரதமர் கூறினார்.

வவுனியா மாவட்ட உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் வவுனியா மாவட்ட செயலகத்தில் “புதிய கிராமம் - புதிய நாடு” தேசிய நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்து நடைபெற்ற கூட்டத்தில் பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

கிராம அலுவலர்களின் வெற்றிடங்கள் உள்ள தொலைதூர பிரதேசங்களில் விசேட தகைமையின் அடிப்படையில் பரீட்சையை நடத்திய பின்னர் வெற்றிடங்கள் நிரப்பப்படும் என பிரதமர் மேலும் கூறினார். (அ)

# அம்பாந்தோட்டையில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை அமைக்கும் சீனாவின் சினொபெக்!

கொழும்பு, நவ. 04

அம்பாந்தோட்டையில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை அமைப்பதற்காக, சீனாவின் சினோபெக் நிறுவனம், 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என்ற மிகப்பெரிய நேரடி முதலீட்டை மேற்கொள்ளவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுவரையில், சீன முதலீடான கொழும்பு போர்ட் சிட்டி, இலங்கையில் மிகப்பெரிய நேரடி முதலீட்டு திட்டமாக கருதப்படுகிறது.

அம்பாந்தோட்டை துறைமுகம் என்பது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் சீனாவின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட ஆழ்கடல் துறைமுகமாகும்.

இருப்பினும், குறித்த துறைமுகம் 2017ஆம் ஆண்டில் சீன அரசுக்கு சொந்தமான ‘சீனா மெர்ச்சன்ட்ஸ்’ நிறுவனத்திற்கு 99 ஆண்டுகளுக்கு 1.12 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டது.



அண்மையில் இடம்பெற்ற சீன விஜயத்தின் போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சினோபெக் குழுமத்தின் தலைவர் மா யோங்ஷெங் மற்றும் உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்தநிலையில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை அமைப்பதற்கு சீனாவின் சினோபெக் நிறுவனம் முதலீடு செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சினோபெக் நிறுவனம் ஏற்கனவே இலங்கையின் சில்லறை எரிபொருள் சந்தையிலும் பிரவேசித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வடக்கு-கிழக்கில் மக்களைத் திரட்டி அரசாங்கத்துக்கு பதில் சொல்வோம்!

## மட்டு. பண்ணையாளர் போராட்டத்தில் சிறிதரன்

மட்டக்களப்பு, நவ. 04

வடக்கு, கிழக்கில் இடம்பெற்றுவரும் காணி அபகரிப்புகளை நிறுத்தாவிட்டால் வெகுவிரைவில் பாரிய அளவில் மக்களைத் திரட்டி அரசாங்கத்திற்கு பதில் சொல்வோம் என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கால்நடை பண்ணையாளர்களால் சித்தாண்டி மகா வித்தியாலயம் முன்பாக முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மயிலத்தமடு, மாதவனை பகுதிகளில் உள்ள பண்ணையாளர்களின் மேய்ச்சல் தரையானது அம்பாறை மற்றும் பொலநறுவை பகுதிகளிலிருந்து வருகை தந்துள்ள சிங்கள விவசாயிகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அதேவேளை தமிழர்களுடைய கால்நடைகளும் சுட்டுக்கொல்லப்படுகின்றன.

தமிழ் மக்களின் அடிப்படையான அவர்களின் நிலத்தைப் பறித்தல் என்பது அவர்களை வாழவிடாமல் அகற்றுவதற்கான முயற்சியாகும், அம்பாறையில் தமிழ் மக்களின் இருப்புகளையும் பிரதிநிதித்துவத்தையும் இழந்துவரும் நேரத்தில் திருகோணமலையிலும் அதேநிலைமையினை எதிர்கொண்டுள்ள காலச் சூழலில் தொடர்ந்தும் நாங்கள் பாதிக்கப்படுகின்றோம், வஞ்சிக்கப்படுகின்றோம்.

அதற்கு எதிராகவே மக்கள் போராட்டத்தினை முன்னெடுத்திருக்கின்றார்கள். அவர்களுக்கு ஆதரவு வழங்குவது என்பது எங்களது கடமையாகும்.இது தொடர்பில் சட்ட நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஜனாதிபதி அப்பகுதியில் உள்ள சட்டவிரோத குடியேற்றக்காரர்களை அகற்றுமாறு கூறிய பின்னரும் அப்பகுதியில் புத்தர் சிலையை வைத்தார்கள். வாய் பேசாத மாடுகள் வெடிவைத்து கொல்லப்படுகின்றன. சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் விரைவில் நாங்கள் வடக்கு, கிழக்கில் மாபெரும் மக்கள் அலையை உருவாக்கி அரசாங்கத்திற்கு ஒரு பதிலைக் கூறுவோம் - என்றார். (அ)

## போரட்டம்....

சாதகமான பதிலை கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் நேற்று முன் தினம் முதல் மாகாண மட்டத்தில் தொடர்ச்சியான அடையாள வேலைநிறுத்தங்களை ஆரம்பித்தது.

நேற்று னமுன் தினம ஊவா மாகாணத்தில் உள்ள அனைத்து அரச வைத்தியசாலைகளிலும் உள்ள வைத்திய அதிகாரிகள் அடையாள வேலைநிறுத்தத்தில் இணைந்திருந்தனர்.

வட மாகாணத்தில் வைத்திய அதிகாரிகள் நேற்று காலை அடையாள வேலை நிறுத்தத்தை ஆரம்பித்ததுடன், வடமேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் வைத்தியர்கள் முறையே நவம்பர் 06 மற்றும் 07 ஆம் திகதிகளில் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கவிருந்தனர்.

இவ்வாறான நிலையில், அரச அதிகாரிகளிடமிருந்து கிடைக்கப்பெற்ற சாதகமான பதிலை கருத்திற்கொண்டு வேலை நிறுத்தப் போராட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்துவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

## பூகோள....

தெரிவித்துள்ளார்.

குருநகர் பகுதியை சேர்ந்த உள்ளூர் தொழில் முயற்சியாளர் ஒருவருக்கு சொந்தமான வீ. ஆர். இன்ரர்நஷனல் தனியார் நிறுவனத்தினால் அமைக்கப்பட்டுள்ள கடலட்டை குஞ்சு இனப்பெருக்க நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட கடலட்டை குஞ்சு விற்பனையை நேற்று வைபவ ரீதியாக ஆரம்பித்து உரையாற்றும் போதே, கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

“எமது பிரதேச வளங்களை பயன்படுத்தி எமது மக்களின் வாழ்வாதாரத்தையும் எதிர்காலத்தையும் சுபீட்சமாக்க முடியும் என்ற நம்பிக்கையிலும் எமது பிரதேச வளங்களின் பயன்களை எமது மக்களே பூரணமாக அனுபவிக்க வேண்டும் என்பதற்காகவுமே கடலட்டை பண்ணை விடயத்தில் அதிக கவனம் செலுத்தி வருகின்றேன்.

ஆனால், எமது மக்கள் பொருளாதார ரீதியில் வலுவடைவதை விரும்பாத அரசியல் விஷமிகள் சிலரும் கடற்றொழிலாளர்கள் என்று சொல்லிக் கொள்ளுகின்ற சிலரும், கடலட்டைப் பண்ணை தொடர்பாக தவறான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

கடலட்டைப் பண்ணைகளை விஸ்தரிப்பதற்கு சீனாவில் இருந்து ஒரு குழுவினர் விரைவில் யாழ்ப்பாணம் வரவுள்ளதாக, இன்றைய பத்திரிகை ஒன்றில்கூட செய்தி வெளியாகியிருக்கிறது. அது உண்மைக்கு புறம்பான செய்தி.

இவ்வாறான அடிப்படையற்ற தீய நோக்கம் கொண்ட செய்திகள் தொடர்பாக நான் அலட்டிக் கொள்வதில்லை. மக்களும் அலட்டிக்கொள்ள மாட்டார்கள் என்று நம்புகின்றேன்.

பூகோள அரசியல் என்று வந்தால் எனது முன்னுரிமை இந்தியாவாகவே இருக்கும் என்பதை பலமுறை தெரிவித்திருக்கின்றேன். அதனை இங்கு மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றேன்” என்று தெரிவித்துள்ளார். (அ)

## ஜனாதிபதி....

ஏற்பட்டது.

எதிர்பாராத தருணத்தில் ஹெலிகொப்டர் தரையிறங்கியதையடுத்து, அங்கு பொதுமக்கள் குவிந்தனர். இதையடுத்து வேறு ஒரு வாகனத்தில் ஜனாதிபதி அவ்விடத்தை விட்டு வெளியேறினார்.

வாகனம் வரும் வரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புத்தருவகல கல்லூரியில் தங்கியிருந்தார். (அ)

## யாழ். போதனா....

வைத்தியசாலைகளிலும் அவசர சிகிச்சைகள் தவிர்ந்த ஏனைய சிகிச்சைகள் இடம்பெறவில்லை.

மகப்பேற்று மருத்துவ சேவைகள், சிறுவர் மருத்துவ சேவைகள், புற்றுநோய் சிகிச்சைகள், சிறுநீரக செயலிழப்புக்கான சிகிச்சைகள் இடம்பெற்றன.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை முன்பாக நேற்று காலை ஒன்றுகூடிய வைத்தியர்கள் கவனவீரப்பு ஒன்றை முன்னெடுத்தனர்.

திறமையற்ற சுகாதார நிர்வாகிகளே வைத்தியர்களின் தொழில் உரிமைகளில் கை வைக்காதே!, முறையற்ற வரி சம்பள வெட்டு வைத்தியர்களை துரத்தாதே, அடிப்படை மருந்து உபகரணங்களை உறுதிப்படுத்து போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை வைத்தியர்கள் தாங்கியிருந்தனர்.

பல மாதங்களாக வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேற இருப்பதையும், அது தொடர்பாக ஏற்படக்கூடிய பிரச்னைகளையும், அதை தடுப்பதற்குரிய வழி வகைகளைப் பற்றியும் ஆட்சியாளர்களுக்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், மக்களுக்கும் தெளிவுபடுத்தியிருந்தோம்.

இருப்பினும் இதுவரை எந்தவிதமான சாதகமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் உரிய தரப்பினால் மேற்கொள்ளப்படாத நிலையில் நாம் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்த போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் தெரிவித்தனர்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் நேற்று முன் தினம் முதல் மாகாண ரீதியாக அடையாள வேலை நிறுத்த தொழிற்சங்கப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளது. (அ)

## பலாலி ஊடாக....

பார்வையிட்டார்.

வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸூம் நிகழ்வில் கலந்து கொண்டு நிதியமைச்சரை சந்தித்தார்.

அதன் பின்னர் யாழ். நூலகம் மற்றும் நல்லூர் ஆலயத்திற்கு விஜயம் செய்த இந்திய நிதியமைச்சர் பின்னர் இந்திய ஸ்டேட் வங்கியின் யாழ்ப்பாண கிளையின் திறப்பு விழாவில் கலந்து கொண்டார்.

பின்னர் யாழ்ப்பாணம் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் உரையாற்றிய வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ்,

‘அன்றிலிருந்து இன்றுவரை இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நெருங்கிய உறவு இருந்ததையும், நாட்டின் தேவைக்காக அவர்கள் ஒருவரையொருவர் பல்வேறு வழிகளில் ஆதரித்ததையும் மரியாதையுடன் நினைவுகூர வேண்டும்’ என்று கூறினார்.

‘வடக்கிலும் இந்த நாட்டிலும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக வீடமைப்புத் திட்டங்கள் உள்ளிட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கு இந்திய அரசாங்கம் வழங்கிய பங்களிப்புக்காகவும் குறிப்பாக இந்த மாகாணத்தின் அபிவிருத்திக்காகவும் நன்றி தெரிவிக்க வேண்டும்’ என்றார்.

அத்துடன், எமது நாட்டுக்கு சர்வதேச நிதி உதவிகளை பெற்றுக் கொடுப்பதற்கு இந்திய அரசாங்கம் பூரண ஆதரவை வழங்கியதை நினைவுகூர்ந்த ஆளுநர், இந்திய நிதியமைச்சரின் வருகை இந்த நாட்டிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான நெருக்கத்தை மேலும் வளர்க்க உதவும் எனவும் தெரிவித்தார்.

## ஹமாஸிடம்....

பண்டாரவின் கூற்றுப்படி, 48 வயதான அவரது குழந்தைகளின் மரபணு மாதிரிகளை அடையாளம் தெரியாத உடலுடன் இணைத்ததன் பின்னர் இஸ்ரேல் பொலிஸ் இன்டர்போல் பிரிவால் அவரது மரணம் உறுதிப்படுத்தப்பட்டது.

ஹமாஸ் போராளிகள் முற்றுகையிடப்பட்ட காஸா பகுதியிலிருந்து இஸ்ரேலிய நகரங்களுக்குள் தாக்குதலைத் தொடுத்த ஒக்ரோபர் 07ஆம் திகதி முதல் சுஜித் பண்டார காணாமல் போயிருந்தார்.

பின்னர், பண்டாரவின் பிள்ளைகள் வழங்கிய டி.என்.ஏ மாதிரிகள் மேலதிக விசாரணைகளுக்காக இஸ்ரேலுக்கு அனுப்பப்பட்டன.

வென்னப்புவ பகுதியைச் சேர்ந்த பண்டார, 2015ஆம் ஆண்டு வேலை வாய்ப்புக்காக இஸ்ரேலுக்கு சென்றிருந்தார்.

மத சடங்குகள் மற்றும் பொது மரியாதையின் பின்னர் பண்டாரவின் உடல் கொழும்புக்கு அனுப்பப்படும் என்று இலங்கை தூதுவர் நிமல் பண்டார கூறியுள்ளார்.

இதேவேளை, இஸ்ரேலில் ஹமாஸ் அமைப்பினரால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் வீட்டுப் பணியாளராக பணியாற்றிய இலங்கைப் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

அனுலா ஜயதிலகவின் சடலம் மீட்கப்பட்டு கடந்த வாரம் நாட்டுக்கு கொண்டு வரப்பட்டமையும் தெரிவித்தார். (அ)

## வடக்கில்....

ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்துகொள்கின்றனர்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களும் விருந்தினர்களாக பங்கேற்கின்றனர்.

வடக்கில் தெரிவாகியுள்ள 401 அதிபர்களுக்கு இந்த நிகழ்வில் வைத்து நியமனக் கடிதங்கள் கையளிக்கப்படவுள்ளன. (அ)

## இலங்கை....

கொழும்பு வந்த இந்தியாவின் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், வடக்கு - கிழக்குக்கும் வந்து பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்றுள்ள நிலையிலேயே சம்பந்தன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் வாழும் தமிழ் மக்களின் நலனில் இந்திய மத்திய அரசு முழுமையான அக்கறை செலுத்தியுள்ளது. உதவிகளையும் தொடர்ந்து வழங்கி வருகின்றது. இதனை நாம் வரவேற்கின்றோம். அதேபோல், இலங்கையில் தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு விரைந்து கிடைக்க நரேந்திர மோடி தலைமையிலான இந்திய அரசு, இலங்கை அரசுக்குக் கடும் அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும்.

“அரசியல் தீர்வு விவகாரத்தில் ராஜபக்ஷ அரசு போல் ரணில் அரசும் வாக்குறுதிகளை மாத்திரம் வழங்குகின்றது. ஆனால், செயல் வடிவில் எந்த முன்னேற்றமும் இல்லை. இந்த விவகாரத்தில் இந்திய மத்திய அரசு அதீத கவனம் செலுத்த வேண்டும் - என்றார். (அ)

## வடக்கு....

சுதந்திரமாக ஈடுபட முடியாது உள்ளதாகவும் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசங்களின் முன்னாள் தலைவர் அன்னலிங்கம் அன்னராசா விசனம் தெரிவித்தார்.

வடமராட்சியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எங்களுடைய வளங்களும், வாழ்வாதாரங்களும், சீன நாட்டுக்கு விற்கப்பட்டு சீன அரசாங்கம் எங்களுடைய இருப்பையே கேள்விக்குறியாக்குகின்ற நிலையில் உள்ளது.

இதனால் வடக்கு-கிழக்கு கடலில் நாங்கள் சுதந்திரமாக கடற்றொழிலில் ஈடுபட்டு எங்களுடைய வாழ்வாதாரத்தை கொண்டு செல்ல முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்- என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# இலங்கைக்கு தொடர்ந்து தென் கொரியா ஆதரவு

கொழும்பு, நவ. 04

**இலங்கையின் முன்னேற்றத்திற்கு தொடர்ச்சியான பங்களிப்பை வழங்குவதாக தென்கொரிய ஜனாதிபதி யூன் சுக் இயோல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடம் மீண்டும் உறுதியளித்துள்ளார்.**

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 78ஆவது அமர்விற்கு இணையாக கடந்த செப்ரெம்பர் 18 ஆம் திகதி நியூயோர்க் நகரில் நடைபெற்ற இரு நாட்டு தலைவர்களுக்கும் இடையிலான இருதரப்பு சந்திப்பை பாராட்டும் வகையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பியுள்ள விசேட கடிதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக இரு நாடுகளுக்கும் இடையில் காணப்படும் இருதரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்த அந்த சந்திப்பு வழி செய்திருந்தாக சுட்டிக்காட்டியுள்ள தென்கொரிய ஜனாதிபதி, அங்கு கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அமர்வு நிறைவடைந்து நாடு திரும்பியவுடன் சந்திப்பில் பேசப்பட்ட விடயங்களை முன்னெடுக்கத் தேவையான பணிகளை விரைவில் மேற்கொள்ளுமாறு அந்நாட்டு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியிருப்பதாகவும் தென் கொரிய ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இலங்கைக்கு தென்கொரியா வழங்கியிருக்கும் தொழில்வாய்ப்புக்களை அதிகரிக்கவும், கால நிலை மாற்றத்தை தணிப்பதற்கான இரு நாடுகளுக்கும் இடையிலான ஒப்பந்தத்தில் விரைவில் கைசாத்திட எதிர்பார்ப்பதாகவும் தென்கொரிய ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

வர்த்தக மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு கட்டமைப்பின் ஊடாக இரு நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் விசேட கவனம் செலுத்துவதாகவும் தெரிவித்துள்ளார்.

விரிவான பரப்புக்குள் இரு நாடுகளுக்கும் இடையிலான தொடர்புகளை மேலும் பலப்படுத்துவதற்கு அர்ப்பணிப்பதாக மீண்டும் உறுதியளித்துள்ள தென்கொரிய ஜனாதிபதி, மேலதிகமான பேச்சுகளுக்காக எதிர்வரும் நாட்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துப் பேச எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கொரிய குடியரசு இந்து- பசுபிக் வலயத்திற்குள் தனது தலையீட்டை மேம்படுத்தி வரும் தருணத்தில் இருநாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை பலப்படுத்திக்கொள்வதன் அவசியம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆற்றிய உரையை தென்கொரிய ஜனாதிபதி பாராட்டியுள்ளார்.

அதேபோல் இலங்கை மக்களுக்கான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டங்களை பாராட்டியுள்ள தென்கொரிய ஜனாதிபதி யூன் சுக் இயோல், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சக்தியையும் நீண்ட ஆரோக்கியத்தையும் வேண்டி பிரார்த்திப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். (அ)

## பொலிஸ்மா அதிபருக்கு 4ஆம் முறை சேவை நீடிப்பு

கொழும்பு, நவ. 04

பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் மேலும் சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவுக்கு இவ்வாறு சேவை வழங்கப்படுவது இது நான்காவது முறையாகும்.

இதற்கு முன்னர் சி.டி.விக்ரமரத்னவுக்கு மூன்று மாதங்கள் என்ற அடிப்படையில் இரண்டு முறையும், மூன்று வாரங்கள் சேவை நீடிப்பு ஒரு முறையும் ஜனாதிபதியால் வழங்கப்பட்டிருந்தது.

மூன்று வார கால சேவை நீடிப்பு நேற்று முன்தினம் முடிவடைந்த நிலையிலேயே ஜனாதிபதி இவருக்கு மீண்டும் சேவை நீடிப்பை வழங்கியுள்ளார்.

அரசியலமைப்பில் ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரங்களின் பிரகாரம் இவ்வாறு சேவை நீடிப்பை வழங்கியுள்ளார்.

கடந்த முறை சேவை நீடிப்பு வழங்கப்பட்டபோது, அரசியலமைப்புப் பேரவையின் அனுமதியை பெறவில்லையென எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டுகளை சுமத்திய நிலையில், ஜனாதிபதி மீண்டும் சேவை நீடிப்பை வழங்கியுள்ளார். (அ)

## வடக்கில் முக்கிய திணைக்களங்களுக்கு பெரும்பான்மையின சாரதிகள் நியமனம்

யாழ்ப்பாணம், நவ. 04

வடக்கில் உள்ள கடற்றொழில் நீரியல் திணைக்களங்களுக்கு சாரதி பதிவிக்கு இரு சிங்கள உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம்,கிளிநொச்சி மாவட்ட திணைக்களங்களுக்கே இரு சிங்கள சாரதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஒரு லட்சம் வேலை வாய்ப்புச் செயலணியில் நியமனம் பெற்ற இருவரே இவ்வாறு யாழ்ப்பாணம், கிளிநொச்சிக்கு நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் யாழ். மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சரொருவர் ஒரு லட்சம் செயலணியின் மூலம் வடக்கில் நியமிக்கப்பட்ட சிங்கள இனத்தவர்கள் திருப்பி அனுப்பப்படுவர் எனத் தெரிவித்த நிலையிலேயே குறித்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (அ)

## பிரமிட் திட்ட நிறுவனத்தின் உறுப்பினர்கள் ஐவர் கைது!

கொழும்பு, நவ. 04

ஒன்மக்ஸ் டி.ரி. நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் ஐவர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் ஐவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பிரமிட் பண விவகாரம் தொடர்பாக நடந்தப்பட்ட விசாரணைகளின் பின்னரே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என தெரிவிக்கப்பட்டது.

இந்த நிறுவனம் இலங்கை மத்திய வங்கியினால் தடை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சீனிக்கு சில்லறை விலை

கொழும்பு, நவ. 04

பொதியிடப்படாத ஒரு கிலோ வெள்ளை சீனியின் அதிகபட்ச சில்லறை விலை 275 ரூபாயாகவும், பொதி செய்யப்பட்ட ஒரு கிலோ சீனிக்கு 295 ரூபாயாகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

சீனிக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயிக்கும் வர்த்தமானி அறிவிப்பை நுகர்வோர் விவகார அதிகார சபை வெளியிட்டுள்ளது. பொதியிடப்படாத ஒரு கிலோ வெள்ளை சீனியின் அதிகபட்ச சில்லறை விலை 275 ரூபாயாகவும் பொதி செய்யப்பட்ட ஒரு கிலோ சீனிக்கு 295 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பொதி செய்யப்படாத ஒரு கிலோ சிவப்பு சீனியின் அதிகபட்ச விலை 330 ரூபாயாகும், பொதி செய்யப்பட்ட ஒரு கிலோ சிவப்பு சீனியின் அதிகபட்ச சில்லறை விலை 350 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (அ)

## பருத்தித்துறை வைத்தியசாலையிலும் அரச மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பு



யாழ்ப்பாணம், நவ. 04

வடமராட்சி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலும் நேற்று அரச மருத்துவர்களின் புறக்கணிப்புப் போராட்டம் இடம்பெற்றது.

வடக்கு மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் நேற்று வெள்ளிக்கிழமை ஒரு நாள் அடையாள வேலை நிறுத்த போராட்டத்தை முன்னெடுத்துள்ள அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அரசுக்கு வழங்கப்பட்ட முன்மொழிவுகள் தொடர்பில் இதுவரை எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையிலேயே ஒரு நாள் வேலைநிறுத்தமாக நேற்று பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டது.

எனினும் அவசர, மகப்பேறு, சிறுவர், சிறுநீரக சிகிச்சைகள் என்பன இடம்பெற்றன. (அ-02)

## கிளிநொச்சி நீதிமன்றல் 140 கிலோ கஞ்சா திருடிய நான்கு பேர் பொலிஸாரினால் கைது!

கிளிநொச்சி, நவ. 04

கிளிநொச்சி நீதிமன்றத்தில் கைப்பற்றப்பட்டு வைக்கப்பட்டிருந்த 140 கிலோ கிராம் கஞ்சாவை திருடிய நான்வர் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

கடந்த மாதம் கிளிநொச்சி நீதிமன்றத்தில் சான்றுப் படுத்தப்பட்டு பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டிருந்த கஞ்சா திருடப்பட்டிருந்தது.

இதனையடுத்து கிளிநொச்சி மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

கிளிநொச்சி முல்லைத்தீவு பிரதி பொலிஸ்மா அதிபரின் ஆலோசனைக்கு அமைவாக கிளிநொச்சி மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் உப்புல செனவரத்தினவின் கீழ் இயங்கி வருகின்ற மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவினரின் பொறுப்பதிகாரி பி. ஐ. மங்கள தலைமையிலான பொலலஸார் இரகசிய தேடுதலை மேற்கொண்டிருந்த வேளையில் இந்த நால்வரும் கைது செய்யப்பட்டனர்.

இதில் ஒருவர் நீதிமன்ற பணியாளர். இருவர் நீதிமன்ற சுத்திகரிப்பு மேற்பார்வையாளர்கள். கைதானவர்களில் மூன்று பேர் கிளிநொச்சியை சேர்ந்தவர்கள். கைதான நீதிமன்ற பணியாளர் அம்பாறையை சேர்ந்தவர்.

நீதிமன்ற களஞ்சிய அறையை உடைத்து கஞ்சா திருடி, அதனை விற்பனை செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு, மேலதிக விசாரணைகளுக்காக பொலிசாரினால் தடுத்து வைக்கக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் கஞ்சா வியாபாரத்துடன் தொடர்புடையவர்களை கைது செய்ய பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.11.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இந்தியாவிடம் இலங்கை படுதோல்வியடைந்தது!

மும்பை, நவ. 04

ஒருநாள் கிரிக்கெட் உலகக் கோப்பை தொடரில் இலங்கை அணிக்கு எதிரான லீக் ஆட்டத்தில் 302 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இந்திய அணி அரை இறுதி சுற்றுக்கு தகுதி பெற்றது.

மும்பை வான்கடே மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி களத்தடுப்பைத் தேர்வு செய்தது. இதையடுத்து முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு தொடக்கம் சற்று அதிர்ச்சியாக இருந்தது. தில்ஷான் மதுஷங்க வீசிய முதல் பந்தில் பௌண்ட்ரி அடித்த ரோஹித் சர்மா (4), அடுத்த பந்தில் விக்கெட்டைப் பறிகொடுத்தார். இதன் பின்னர் களமிறங்கிய விராட் கோலி, ஷுப்மன் கில்லுடன் இணைந்து இணைப்பாட்டத்தை ஏற்படுத்தினார்.

தொடக்க ஓவர்களில் இந்த ஜோடி சற்று தடுமாறியது. ஆனால், களத்தில் நிலை பெற்ற பின்னர் இருவரும் மட்டையை சுழற்றத் தொடங்கினர். விராட் கோலி 50 பந்துகளில் தனது 70ஆவது அரை சதத்தையும், ஷுப்மன் கில் 50 பந்துகளில் தனது 11ஆவது அரை சதத்தையும் கடந்தனர். அபாரமாக விளையாடி வந்த ஷுப்மன் கில் 92 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 11 பௌண்ட்ரிகளுடன் 92 ஓட்டங்கள் விளாசிய நிலையில் தில்ஷான் மதுஷங்க வீசிய விக்கெட் காப்பாளரிடம் பிடி கொடுத்து வெளியேறினார்.

2ஆவது விக்கெட்டுக்கு விராட் கோலியுடன் இணைந்து 189 ஓட்டங்கள் சேர்த்தார் ஷுப்மன் கில். சச்சினின் 49 சதங்கள் சாதனையை சமன் செய்வார் என எதிர்பார்க்கப்பட்ட விராட் கோலி 94 பந்துகளில், 11 பௌண்ட்ரிகளுடன் 88 ஓட்டங்கள் எடுத்த நிலையில் தில்ஷான் மதுஷங்க பந்தில் விக்கெட்டை பறிகொடுத்தார். வேகம் குறைத்து அவர் வீசிய ஒவ் கட்டர் பந்து துடுப்புக்கு வருவதற்கு முன்னதாகவே விராட் கோலி அடிக்க முயன்ற போது பதும் நிஷங்கவிடம் எளிதாக கேட்ச் ஆனது.

இதன் பின்னர் களமிறங்கிய ஸ்ரேயஸ் ஐயர், இலங்கை அணியின் பந்து வீச்சை கடும் சிதைவுக்கு உட்படுத்தினார். மறுபுறம் நிதானமாக விளையாடிய கே. எல். ராகுல் 21, சூர்யகுமார் யாதவ் 12 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். தனது 16ஆவது அரை சதத்தை கடந்த ஸ்ரேயஸ் ஐயர் 56 பந்துகளில், 6 சிக்ஸர்கள், 3 பௌண்ட்ரிகளுடன் 82 ஓட்டங்கள் விளாசிய நிலையில் தில்ஷான் மதுஷங்கவின் பந்தில் தீக்ஷனவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இறுதிக்கட்டத்தில் ரவீந்திர ஜடேஜா 24 பந்துகளில், ஒரு சிக்ஸர், ஒரு பௌண்ட்ரியுடன் 35 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ரன் அவுட் ஆனார். மொகமது ஷமியும் 2 ஓட்டங்களில் ரன் அவுட் முறையில் வெளியேறினார். முடிவில் 50 ஓவர்களில் இந்திய அணி 8 விக்கெட்கள் இழப்புக்கு 357 ஓட்டங்கள் குவித்தது. ஜஸ்பிரீத் பும்ரா ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். இலங்கை அணி சார்பில் தில்ஷான் மதுஷங்க 10 ஓவர்களை வீசி 80 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 5 விக்கெட்களை வீழ்த்தினார்.

358 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணியானது இந்திய வேகப்பந்து வீச்சிலேயே தொடக்கத்திலேயே கடும் சரிவை சந்தித்தது. ஜஸ்பிரீத் பும்ரா வீசிய முதல் பந்திலேயே பதும் நிஷங்க (0), எல்பிடபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். அடுத்த ஓவரை வீசிய மொகமது சிராஜ் முதல் பந்தில் திமுத் கருணரத்னவை (0) வெளியேற்றினார். தொடர்ந்து 5ஆவது பந்தில் சதீரா சமரவிக்ரம (0) 3-வது ஸ்லிப் திசையில் நின்ற ஸ்ரேயஸ் ஐயரிடம் பிடிகொடுத்து நடையை கட்டினார்.

மொகமது சிராஜ் தனது அடுத்த ஓவரில் அணித்தலைவர் குஷால் மெண்டிஸை (1) பெவிலியனுக்கு அனுப்ப இலங்கை அணி அதிர்ச்சியில் உறைந்தது. அந்த அணி 3 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களை பறிகொடுத்த நிலையில் மொகமது ஷமி தனது விக்கெட் வேட்டையை தொடங்கினார். சரித் அசலங்க (1), துஷான் ஹேமந்த (0), துஷ்மந்தா சமீரா (0), அஞ்சலோ மத்தியூஸ் (12), கசன் ரஜிதா (14) ஆகியோரை ஆட்டமிழக்கச் செய்தார் மொகமது ஷமி.

கடைசி வீரராக தில்ஷான் மதுஷங்க 5 ஓட்டங்களில் ஜடேஜா பந்தில் வெளியேற இலங்கை அணி 19.4 ஓவர்களில் 55 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது. இந்திய அணி சார்பில் மொகமது ஷமி 5 ஓவர்களை வீசி ஓர் ஓட்டமற்ற 18 ஓட்டங்களை மட்டும் விட்டுக்கொடுத்து 5 விக்கெட்களை வீழ்த்தினார். மொகமது சிராஜ் 7 ஓவர்களை வீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 16 ஓட்டங்களை வழங்கி 3 விக்கெட்களை கைப்பற்றினார். ஜஸ்பிரீத் பும்ரா, ஜடேஜா ஆகியோர் தலா ஒரு விக்கெட் கைப்பற்றினார்கள்.

302 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இந்திய அணிக்கு இது 7-வது வெற்றியாக அமைந்தது. நடப்பு தொடரில் தோல்வியை சந்திக்காமல் வலம் வரும் இந்திய அணி 14 புள்ளிகளுடன் பட்டியலில் முதலிடத்துக்கு முன்னேறியதுடன் முதல் அணியாக அரை இறுதி சுற்றுக்கு தகுதி பெற்றது. இதேவேளையில் 7 ஆட்டங்களில் 5ஆவது தோல்வியை சந்தித்த இலங்கை அணி அரை இறுதிக்கு தகுதி பெறும் வாய்ப்பை ஏறக் குறைய இழந்தது. (ஐ)




## நெதர்லாந்து அணியை எளிதாக வீழ்த்தியது ஆப்கானிஸ்தான்!




லக்னோ, நவ. 04

நெதர்லாந்து அணிக்கு எதிரான உலகக் கிண்ணப் போட்டியில் 7 விக்கெட் வித்தியாசத்தில் ஆப்கானிஸ்தான் அணி வெற்றி பெற்றுள்ளது.

ஐ. சி. சி. ஒருநாள் கிரிக்கெட் உலகக் கோப்பை தொடரில் நேற்று லக்னோவில் நடந்தது. இதில், ஆப்கானிஸ்தான் - நெதர்லாந்து அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற நெதர்லாந்து முதலில் துடுப்பெடுத்தாடியது.

ஆப்கானிஸ்தான் அணியின் சுழற்பந்துவீச்சுக்கு தாக்குப் பிடிக்காத நெதர்லாந்து 46.3 ஓவர்களில் 179 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. அந்த அணியின் மேக்ஸ் ஓ'டவுட் 42 ஓட்டங்களும், ஏங்கல்பிரெக்ட் 58 ஓட்டங்களும் சேர்ந்தனர். மற்றவர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆப்கானின் நபி, நூர் அகமது சுழல்பந்து வீச்சில் வீழ்ந்தனர். குறிப்பாக, நெதர்லாந்து வீரர்கள் ரன் அவுட் மூலம் வீழ்ந்தனர். ஆப்கானிஸ்தான் அணி தரப்பில் நபி 3 விக்கெட்டும், நூர் அகமது 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதையடுத்து, 180 ஓட்டங்கள் இலக்கை விரட்டிய ஆப்கானிஸ்தான் அணிக்கு குர்பாஸ் மற்றும் இப்ராகிம் ஸத்ரன் இணை சீக்கிரமாகவே விக்கெட்டை இழந்தாலும், ரஹ்மத் ஷா மற்றும் ஹஸ்மதுல்லா ஷாகிதி இணை சிறப்பாக விளையாடி அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றது. இருவருமே அரைச் சதம் கடந்தனர். 52 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் ரஹமத் ஷா விக்கெட்டானார். எனினும், அஸ்மதுல்லா ஓமர்ஸாய் 31 ஓட்டங்கள் எடுத்து கைகொடுக்க, 31.3 ஓவர்களில் 3 விக்கெட்களை இழந்து 181 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது ஆப்கானிஸ்தான். உலகக் கிண்ணத் தொடரில் ஆப்கானிஸ்தான் பெறும் நான்காவது வெற்றி இதுவாகும்.

நடப்பு சம்பியனான இங்கிலாந்து மற்றும் முன்னாள் சம்பியன்களான பாகிஸ்தான், இலங்கை அணிகளை வீழ்த்தி இருந்த ஆப்கானிஸ்தான் நெதர்லாந்தை வீழ்த்தியன் மூலம் நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தானை பின்னுக்குத் தள்ளி புள்ளிப் பட்டியலில் 5-வது இடத்துக்கு முன்னேறியது. (ஐ)

## அரையிறுதிக்கு முன்னேறுவது எமக்கு மிகப்பெரிய சாதனை!

### ஆப்கான் அணித் தலைவர்

லக்னோ, நவ. 04

நடப்பு உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் ஹட்-ட்ரிக் வெற்றியை பதிவு செய்துள்ளது ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி. இந்த சூழலில் தங்கள் அணி அரையிறுதிக்கு முன்னேறினால் அது பெரிய சாதனையாக அமையும் என ஆப்கான் அணியின் தலைவர் ஹஸ்மதுல்லா ஷாகிதி தெரிவித்துள்ளார்.

லக்னோ கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற தொடரின் 34ஆவது போட்டியில் நெதர்லாந்து அணியை 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இருந்தது ஆப்கானிஸ்தான். இது இந்த தொடரில் ஆப்கன் பெற்றுள்ள நான்காவது வெற்றியாகும். இங்கிலாந்து, பாகிஸ்தான், இலங்கை மற்றும் நெதர்லாந்து அணிகளை ஆப்கன் வீழ்த்தி உள்ளது. இதன் மூலம் புள்ளிகள் பட்டியலில் 7 போட்டிகளில் விளையாடி 4 வெற்றிகளின் மூலம் 8 புள்ளிகளுடன் 5ஆவது இடத்தில் உள்ளது.

"இந்தப் போட்டியில் எங்களது பந்து வீச்சு மற்றும் துடுப்பாட்டம் என இரண்டும் சிறப்பாக அமைந்தது. மூன்றாவது முறையாக இந்த தொடரில் இலக்கை வெற்றிகரமாக துரத்தி வென்றோம். இந்த வெற்றியை அடைக்கலம் தேடி தஞ்சம் அடைந்த ஆப்கான் மக்களுக்கு சமர்ப்பிக்கிறேன்.

கள சூழலுக்கு ஏற்ப நாங்கள் விளையாடி வருகிறோம். ஒன்றிணைந்து விளையாடி வெற்றிகளை பெற்று வருகிறோம். அரையிறுதிக்கு முன்னேறுவதற்கான சிறந்த முயற்சியை நாங்கள் முன்னெடுத்துள்ளோம். அது நடந்தால் எங்களுக்கு மிகப்பெரிய சாதனையாக அமையும். இந்நேரத்தில் அது நடந்தால் எங்கள் நாட்டுக்கு மட்டுமல்லாது எனக்கும் தனிப்பட்ட முறையில் ஆறுதலாக அமையும். மூன்று மாதங்களுக்கு முன்னர் எனது தாயை இழந்தேன். எங்கள் குடும்பம் அம்மாவின் இழப்பால் மிகுந்த வேதனையில் உள்ளது" என ஹஸ்மதுல்லா ஷாகிதி தெரிவித்தார்.

# வெளியுறவுக் கொள்கையில் தடுமாறும், தடம் மாறும் பாஜக அரசு!

**ராஜன் குறை**

இருபது லட்சம் பாலஸ்தீனியர்கள் நெருக்கியடித்து வாழும் திறந்தவெளி சிறையான காஸாவிற்குள் ராணுவத்தை அனுப்பியும், குண்டுகளை வீசியும் இஸ்ரேல் நடத்திவரும் தாக்குதல் உலகை உறைய வைத்துள்ளது. காஸா பகுதியை ஆண்டுவந்த ஹமாஸ் அமைப்பு இஸ்ரேல் மேல் "தீவிரவாத" தாக்குதல் நடத்தியது என்ற காரணத்தைச் சொல்லி காஸாவிலுள்ள பாலஸ்தீனிய பொதுமக்களைக் கொன்று குவித்து வருகிறது இஸ்ரேல். நாங்கள் ஹமாஸ் இயக்கத்தை வேரறுக்க விரும்புகிறோம் அவர்கள் பொதுமக்களை கேடயமாகப் பயன்படுத்துகிறார்கள் என்ற பழைய இனப்படுகொலை ஏகாதிபத்திய பல்லவியை மீண்டும் பாடுகிறது இஸ்ரேல். காஸாவின் வடபகுதியிலுள்ள மக்களையெல்லாம் தென்பகுதிக்கு புலம் பெயர்ந்து செல்லுமாறு எச்சரிக்கை விடுத்தது இஸ்ரேல். இது மிகப்பெரிய அவல நிலையை தெற்கு காஸாவில் உருவாக்கியுள்ளது. ஏற்கனவே மக்கள் அடர்த்தியாக வாழும் பகுதிக்கு லட்சக்கணக்கான மக்கள் புலம்பெயர்ந்து வந்தால் என்னவாகும்? இது போன்ற ஓர் இரக்கமற்ற கட்டளையை இஸ்ரேல் விதிப்பது நியாயமா என்று மனசாட்சி உள்ள உலக குடிமக்கள் கேட்கின்றனர்.

இந்த நிலையில்தான் ஐக்கிய நாடுகள் சபை முக்கியமான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது. போரில் ஈடுபடாத அப்பாவி பொதுமக்களைக் கொல்வதை, ஆபத்துக்குள்ளாக்குவதை உடனடியாக நிறுத்த வேண்டும், பேச்சுவார்த்தை மூலம் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று கோரி, போர் நிறுத்தம் செய்ய வலியுறுத்தும் தீர்மானம் அது. நூற்று இருபது நாடுகள் ஆதரவு அளித்ததால், மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை அடிப்படையில் அந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இது உலக சமூகத்துக்கு, மானுட நாகரிகத்துக்குக் கிடைத்துள்ள வெற்றி எனலாம். சீனா, ரஷ்யா ஆகிய முக்கிய நாடுகளுடன் பிரான்ஸும் ஆதரித்து வாக்களித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேலும், அமெரிக்காவும் மேலும் பன்னிரண்டு சிறிய நாடுகளும் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்துள்ளன. அமெரிக்காவின் வெட்கமற்ற, அறமற்ற இஸ்ரேல் ஆதரவுப் போக்கே இஸ்ரேல்-பாலஸ்தீனியப் பிரச்சினை பல பத்தாண்டுகளாக அரசியல் தீர்வு உருவாக முடியாதபடி நீடிப்பதற்குக் காரணம். அரசியல் தீர்வு எட்டப்படாமல் காஸா திறந்தவெளி சிறைச்சாலையாக இஸ்ரேலின் கோரப்பிடியில் சிக்கத் தவிப்பதுதான் ஹமாஸின் தாக்குதலுக்குக் காரணம். இது அமெரிக்காவுக்கு நன்றாகவே தெரியும். தெரிந்தும் இஸ்ரேலின் கொலைவெறித் தாக்குதலை அமெரிக்கா ஆதரிக்கிறது. இது தீவிரவாதத்தை வளர்க்குமா, குறைக்குமா என்று சிந்தித்துப் பார்க்க மறுக்கிறது. அதனால் இந்த பதினான்கு நாடுகள் எதிர்த்து வாக்களித்தது அதிசயமல்ல.

நாற்பத்தைந்து நாடுகள் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை. இவை இஸ்ரேலின் மனிதாபிமானமற்ற தாக்குதலை நிறுத்தச் சொல்லி கோருவதற்கு முன்வரவில்லை என்பது வெட்கக்கேடான விஷயமாகும். அந்த நாற்பத்தைந்து நாடுகளில் இந்தியாவும் இருப்பதுதான் இந்தியர்களாக நாம் வெட்கப்பட வேண்டிய விஷயம். காங்கிரஸ் தலைவர் பிரியங்கா காந்தி இந்தியா ஒரு தேசமாக எந்த கொள்கைகளைக் காத்து நின்றதோ, அவற்றை இன்று காற்றில் பறக்க விட்டுள்ளதாக குற்றம் சாட்டியுள்ளார்.



## போர் நிறுத்தக் கோரிக்கையை ஆதரிப்பதில் என்ன சிக்கல்?

ஹமாஸ் என்பது பல்வேறு பாலஸ்தீனிய அரசியல் அமைப்புகளில் ஒன்றுதான். அவர்கள் தேர்தல்களில் வெற்றிபெற்று ஆட்சியில் பங்கேற்றார்கள். அதே சமயம் தீவிரவாத நிலைக்கும், பேச்சுவார்த்தைகளுக்கும் இடையில் ஊசலாடினார்கள். ஆனால் இஸ்ரேல் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து அரசியல் தீர்வை, இஸ்ரேல் பாலஸ்தீனம் என்ற இரண்டு சுதந்திர அரசுகள் என்ற தீர்வை உருவாக்கத் தவறியது. உலக வல்லரசுகள், முக்கியமாக அமெரிக்கா, இஸ்ரேலை ஒரு அரசியல் தீர்வை எட்டும்படி நிர்பந்திக்கத் தவறின. பாலஸ்தீனிய பகுதிகளில் இஸ்ரேலின் குடியேற்றம் தொடர்ந்தது. தீவிரவாத எதிர்ப்பு என்ற பெயரில் தொடர்ந்து பாலஸ்தீனர்கள் கொடுமைப்படுத்தப்பட்டனர்.

அண்மையில் இந்து ஆங்கில நாளிதழில் முன்னாள் துணை குடியரசுத் தலைவர் ஹமித் அன்சாரி அருமையான கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். அதில் எப்படி அரசியல் தீர்வுக்கான பாதைகள் இஸ்ரேலால் அடைக்கப்பட்டன என்பதை சுட்டிக்காட்டியுள்ளார். ஹமாஸ் காஸாவை ஆள்வதில்தான் குறியாக உள்ளது என தப்புக் கணக்கு போட்ட இஸ்ரேல் அரசியல் தீர்வினை முன்னெடுக்க தவறியது. இருபது லட்சத்துக்கும் அதிகமான மக்களை காஸாவில் ஒரு திறந்தவெளி சிறைச்சாலை போல வாழ நிர்பந்தித்தது. இதெல்லாம்தான் ஹமாஸ் இஸ்ரேல் மீது அக்டோபர் மாதம் கொடூரத் தாக்குதல் நடத்தக் காரணம். இஸ்ரேலில் 1400 பேர் வரை ஹமாஸ் தாக்குதலில் இறந்ததாக இஸ்ரேல் கூறுகிறது.

அதற்குப் பழி வாங்க, ஹமாஸை வேரறுப்பதாகக் கூறி இஸ்ரேல் நடத்தத் தொடங்கிய தாக்குதலில் 6000-க்கும் அதிகமானோர் இறந்திருப்பதாகத் தெரிகிறது. இருபது லட்சம் பேர் மின்சாரம் இன்றி, போதிய குடிநீர் இன்றி, தகவல் தொடர்பும் துண்டிக்கப்பட்டு கடும் அவதிக்கு ஆளாகியுள்ளார்கள். அவர்கள் மீது மானாவாரியாக இஸ்ரேல் தாக்குதல் தொடுத்து வருகிறது. முற்றிலும் சமனற்ற இந்தப் போரில் இஸ்ரேல் இரக்கமின்றி ஈடுபட்டு வருகிறது.

இந்த நிலையில்தான் மனிதாபிமான அடிப்படையிலான போர் நிறுத்தத்தை (**Humanitarian Truce**) ஐக்கிய நாடுகள் சபை தீர்மானம் வலியுறுத்தியுள்ளது. இதை ஆதரிப்பதில் என்ன சிக்கல் இருக்க முடியும்? போரினால் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியுமா? இரக்கமற்ற ராணுவத் தாக்குதல் பாலஸ்தீனர்களை மேலும் தீவிரவாதம் நோக்கித்தானே கொண்டு செல்லும்?

ஆனால் ஜெர்மனி, இங்கிலாந்து, ஜப்பான் உள்ளிட்ட பல நாடுகள் தீர்மானத்தைக் குறித்த வாக்கெடுக்கில் பங்கேற்கவில்லை. இஸ்ரேலுக்கு ஆதரவாக நிற்கும் அமெரிக்காவை பகைத்துக்கொள்ள விரும்பாதது காரணமாக இருக்கலாம். மெள்ள மெள்ள உலகில் மீண்டும் இருதுருவ அரசியல் உருவாகி வருகிறது என்பது தெளிவாக உள்ளது. சீனா ஒருபுறமும், அமெரிக்கா மற்றொருபுறமுமாக அணி சேர்க்கின்றன. சீனா, ரஷ்யா, வடகொரியா, ஈரான் என பல நாடுகள் ஒருங்கிணைகின்றன. அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, ஜப்பான் என மற்றோர் அணி உருவாகிறது. இது 1991ஆம் ஆண்டு ரஷ்யா தகர்ந்ததிலிருந்து உருவான ஒரு துருவ உலகம், அமெரிக்கா தனிப்பெரும் வல்லரசாக விளங்கும் உலகம் என்ற ஒரு கருத்தாக்கத்தை நிச்சயம் மாற்றி வருகிறது.

## இந்தியாவின் தடுமாற்றம்

சுதந்திரத்துக்குப் பிறகு இந்தியா நேருவின் தலைமையில் அணிசேரா நாடுகள் என்ற கோட்பாட்டை உருவாக்கியது. அறம் சார்ந்த நிலைப்பாட்டை, மனிதாபிமான அணுகுமுறையை சர்வதேச பிரச்சினைகளில் இந்தியா முன்னெடுத்தது. பஞ்சசீலக் கொள்கை என்பதை அறிமுகப்படுத்தியது. அவையாவன:

1) எல்லா நாடுகளும் சமாதான சுக வாழ்வு வாழ வேண்டும்.

2) வலிமை மிக்க நாடுகள் வலிமை குறைந்த நாடுகளைத் துன்புறுத்தக் கூடாது.

3) எந்த நாடும் மற்ற நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடக் கூடாது.

4) தேவையுள்ள அனைத்து நாடுகளுக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வர வேண்டும்.

5) அனைத்து நாடுகளின் எல்லைப் பாதுகாப்புக்கும் மரியாதை அளிக்க வேண்டும்.

பாலஸ்தீன மக்களின் உரிமைகளுக்குக் குரல் கொடுப்பது என்பது இந்த கொள்கைகளின் வெளிச்சத்தில் இன்றியமையாதது.

ஆனால், இன்றைய இந்திய அரசு அறம் சார்ந்த நிலைபாடுகளை எடுக்காமல், ஆதாயம் சார்ந்த நிலைபாடுகளை எடுக்கிறது. உக்ரைனை ஆக்கிரமிக்க போர் தொடுத்த ரஷ்யாவை கண்டிப்பதை விட, அது மலிவான விலையில் பெட்ரோல் விற்றால் வாங்குவதில் ஆர்வம் காட்டியது. அதே நேரம் சீனாவின் எல்லை ஊடுறுவல் அச்சுறுத்தலைக் கண்டு அமெரிக்காவினை அனுசரிக்க துடிக்கிறது.

பாலஸ்தீனத்தின் மீது இஸ்ரேல் இன்று தொடுத்துள்ள கொடூர தாக்குதல் ஹமாஸை அழிப்பதற்கு என்பதை குழந்தைகூட நம்பாது. இது பழிவாங்கும் வெறி. பாலஸ்தீனிய உயிர்களை மதிக்காமல் பல பத்தாண்டுகளுக்கு இஸ்ரேல் செய்து வரும் கொடுங்கோன்மையின் வெறித் தாண்டவம். ஹமாஸ் போன்ற தீவிரவாத இயக்கங்களை இத்தகைய தாக்குதல்களால் அழிக்கவும் முடியாது. இன்று நடைபெறும் தாக்குதல்கள் மேலும் இஸ்லாமிய தீவிரவாதத்தை பாலஸ்தீனத்திலும், அதற்கு அப்பாலும் வளர்க்கவே செய்யும்.

இத்தகைய நிலையில் மனிதாபிமான அடிப்படையில் போர் நிறுத்தத்துக்குக் குரல் கொடுப்பதில் இந்தியாவுக்கு என்ன தடை இருக்க முடியும் என்பதே கேள்வி. அதனால்தான் காங்கிரஸ் தலைவர் பிரியங்கா காந்தி இந்தியா தீர்மானத்துக்கு வாக்களித்து ஆதரிக்காதது, இந்தியா தன் தேசிய வாழ்வில் இதுகாறும் கடைப்பிடித்த வந்த கொள்கைகளுக்கு முற்றிலும் எதிரானது என்று கண்டித்துள்ளார்.


Priyanka Gandhi Vadra
@priyankagandhi

"An eye for an eye makes the whole world blind" – Mahatma Gandhi

I am shocked and ashamed that our country has abstained from voting for a ceasefire in Gaza.

Our country was founded on the principles of non-violence and truth, principles for which our freedom fighters laid down their lives, these principles form the basis of the constitution that defines our nationhood. They represent the moral courage of India that guided its actions as a member of the international community.

To refuse to take a stand and watch in silence as every law of humanity is pulverised, food, water, medical supplies, communication and power is cut off to millions of people and thousands of men, women and children in Palestine are being annihilated goes against everything our country has stood for throughout its life as a nation.

Last edited 9:40 AM · Oct 28, 2023 · 1,570 Views

## கண்ணுக்குக் கண் என்பது உலகையே குருடாக்கும்

பிரியங்கா காந்தி அவரது செய்தியின் தொடக்கத்தில் மகாத்மா காந்தியின் புகழ்பெற்ற வரி ஒன்றை மேற்கோள் காட்டியுள்ளார். கண்ணுக்குக் கண் என்ற பழிவாங்கும் போக்கு தொடர்ந்தால் மொத்த உலகமும் குருடாகிவிடும் என்ற கருத்துதான் அது. ஹமாஸ் நடத்திய தாக்குதலுக்கு பழிவாங்க இஸ்ரேல் மேலும் கடுமையான தாக்குதலை காஸா மேல் தொடுத்தால், மேலும் பல தீவிரவாதிகள் இஸ்ரேலுக்கு எதிராக உருவாகத்தானே செய்வார்கள்? அமெரிக்கா மட்டும் என்ன இந்த வன்முறை சுழற்சியிலிருந்து தப்ப முடியுமா?

இவ்வாறு சிந்திப்பதற்கு பதிலாக இந்தியா, ஹமாஸ் நடத்திய தீவிரவாத தாக்குதலை கண்டித்த வரி தீர்மானத்தில் இடம்பெற வேண்டும் என்று கூறியுள்ளதாகத் தெரிகிறது. உள்ளபடி கனடாதான் ஹமாஸை கண்டிக்கும் வரியை சேர்க்க வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டுவந்துள்ளது. ஆனால் அதற்கு போதுமான ஆதரவு கிடைக்கவில்லை. பொதுவாக போர் நிறுத்தம் என்று சொல்லும்போது இருதரப்பும் போரை நிறுத்தி அரசியல் தீர்வு காண வேண்டும் என்பதுதானே பொருள்? அதில் எதற்கு ஒரு தரப்பை மட்டும் கண்டிக்கும் வரி?

இதில் என்ன வேடிக்கை என்றால் அந்த வரியைச் சேர்க்க வேண்டும் என்று கோரிய கனடாதான் தீவிரவாதிகளுக்கு புகலிடம் தருவதாக இந்தியா குற்றம் சாட்டுகிறது. இந்திய அரசு கனடா எல்லைகளுக்குள் தீவிரவாதிகளை கொல்லத் துணைபோவதாக கனடா பகிரங்கமாக கண்டித்தது. இந்த இரண்டு நாடுகளும் சேர்ந்து ஹமாஸை கண்டிக்கின்றன.

பாலஸ்தீன பிரச்சினை எழுபத்தைந்து ஆண்டுக்கால பிரச்னை. ஹமாஸ் உருவாகியது முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர்தான். தீர்க்கப்படாத பாலஸ்தீனிய மக்களின் உரிமைப் பிரச்சினையின் விளைவுதான் ஹமாஸ் இயக்கமே தவிர, பிரச்சினைக்கே ஹமாஸ் காரணமல்ல. அறம் சார்ந்த ஒரு தீர்வு, சுதந்திர பாலஸ்தீன தேசம் என்ற தீர்வு எட்டப்படாவிட்டால் அமைதி என்பது சாத்தியமில்லை. சர்வதேச சமூகத்துக்கு இஸ்ரேலை கண்டிக்கவும், வற்புறுத்தவும் தேவையும், உரிமையும் இருக்கிறது.

ஏனெனில் இஸ்ரேல் சர்வதேச முயற்சியால் உருவான செயற்கையான, காலனிய, குடியேற்ற நாடு. அது உருவாக்கப்பட்ட நிலம் பாலஸ்தீனியர்களின் நிலம். அவர்கள் உரிமையை, சுதந்திரத்தை மறுக்கும் அநீதி களையப்பட வேண்டும். பாஜக அரசு தன் சுயநல ஆதாய அயலுறவுக் கொள்கையை கைவிட்டு, அறம் சார்ந்த கொள்கைகளுக்குத் திரும்ப வேண்டும். ●

# இலங்கை கிரிக்கெட் அணியின் வீழ்ச்சிக்கு அரசியல் தலையீடு காரணமா?
# திறமைக்கு மதிப்பு இல்லையா?

ரஞ்சன் அருண் பிரசாத்

இலங்கை கிரிக்கெட் அணி தொடர்ச்சியாகச் சந்தித்து வரும் பின்னடைவு, உள்நாட்டில் தற்போது பாரிய பேசுபொருளாக மாறியுள்ளது.

இலங்கை கிரிக்கெட் அமைப்பிற்குள் அரசியல் தலையீடுகள் காணப்படுகின்றமையே, இலங்கை கிரிக்கெட் அணி பின்னடைவை சந்திப்பதற்கான பிரதான காரணம் என குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இலங்கை கிரிக்கெட்டிற்குள் அரசியல் தலையீடுகள் காணப்படக் கூடாது என்ற வகையிலான கடிதமொன்று, ஐ.சி.சி.யினால், இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கு அண்மையில் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

சர்வதேசக் கிரிக்கெட் பேரவையின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜெப் எலடயிஸினால், இலங்கை கிரிக்கெட்டின் தலைவர் ஷமி சில்வாவிற்கு இந்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

**‘தேர்தல் மூலம் நிர்வாகத்தை அமைக்க வேண்டும்’**

2024-ஆம் ஆண்டுக்கான சர்வதேச கிரிக்கெட் பேரவையின் மாநாடு மற்றும் எதிர்காலத்தில் நடைபெறவுள்ள சர்வதேச கிரிக்கெட் போட்டிகளுக்கான சந்தர்ப்பத்தை இலங்கைக்கு வழங்குவதற்கு, இலங்கை கிரிக்கெட் தமது சுயாதீனத்தை உறுதிப்படுத்த வேண்டும் என அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2024-ஆம் ஆண்டு 19 வயதுக்குட்பட்ட உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி, 2026-ஆம் ஆண்டு இருபதுக்கு 20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி மற்றும் 2027-ஆம் ஆண்டு மகளிருக்கான டி-20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகளை நடத்துவதற்கான சந்தர்ப்பம் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிகளை இலங்கையில் நடத்த வேண்டும் என்றால், தேர்தலில் தெரிவு செய்யப்படும் நிர்வாகமொன்றை அமைப்பதற்கான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கான உறுதிப்பாட்டை அரசாங்கம் வழங்க வேண்டும் என சர்தேச கிரிக்கெட் பேரவை தெரிவித்துள்ளது.

**‘இலங்கை கிரிக்கெட்டில் அரசியல் தலையீடு’**

இலங்கை கிரிக்கெட்டிற்குள் கடும் அரசியல் தலையீடுகள் காணப்படுவதாக விளையாட்டு விமர்சகர்களும் தெரிவிக்கின்றனர்.

அரசியல் தலையீடுகள் காணப்படுகின்றமையே, இலங்கை கிரிக்கெட் அணி தொடர்ச்சியாக தோல்விகளை சந்திப்பதற்கான காரணமாக அமைந்துள்ளது என இலங்கையின் விளையாட்டு விமர்சகரும், விளையாட்டு ஊடகவியலாளருமான அப்துல் ரகுமான் தெரிவிக்கின்றார்.




“இலங்கை கிரிக்கெட்டிற்குள் அரசியல் தலையீடுகள் காணப்படுகின்றன. அதை ஐ.சி.சி சொல்ல வேண்டிய தேவையில்லை. இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவே மிகத் தெளிவாகச் சொல்கின்றார். இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்குள் நடைபெறக் கூடிய ஊழல்கள், கிரிக்கெட் எந்தளவிற்கு படுமோசமாகியுள்ளது போன்ற விஷயங்களை அண்மையில் தனியார் தொலைக்காட்சி ஒன்றிற்கு வழங்கிய பேட்டியில் கூறியிருந்தார்,” என்கிறார் அப்துல் ரகுமான்.

“எனவே நிச்சயமாக இலங்கை அணியின் இந்த பின்னடைவுக்கு, முகாமைத்துவ மட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளே காரணம். யார் யாருடைய தேவைகளுக்காக வீரர்கள் தெரிவு செய்யப்படுகின்றமை போன்ற பல்வேறு காரணங்கள் இலங்கையில் கிரிக்கெட் இல்லாது போகின்றமைக்குப் பிரதான காரணமாகும்,” என்றார்.

உதாரணமாக அவர் ஜிம்பாப்வே அணியைச் சொல்கிறார். ஜிம்பாப்வே கிரிக்கெட் அடிமட்டத்திற்குப் போவதற்கு அரசியல்தான் காரணம் என சொல்லப்பட்டது, என்கிறார்.

“வெஸ்ட் இண்டீசிலும் அதே நிலைமை தான். நிச்சயமாக இலங்கை அணியில் அந்த பிரச்னைகள் இருப்பதன் காரணமாக தான், திறமையான வீரர்களுக்கு சரியான வாய்ப்புக்கள் கொடுக்கப்படுவதில்லை. பயிற்சி இல்லாத, தங்களுக்கு தேவையான வீரர்களை வைத்துக் கொள்வது போன்ற குற்றச்சாட்டுகள் நிச்சயமாக ஏற்றுக் கொள்ளக் கூடியது தான். ஐ.சி.சி இவ்வாறான விடயங்களை மேலும் தீவிரமாக ஆராய வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்,” என விளையாட்டு ஊடகவியலாளர் அப்துல் ரகுமான் தெரிவிக்கின்றார்.



**‘பாகிஸ்தானின் நிலைதான் இலங்கை அணிக்கும்’**

இலங்கை கிரிக்கெட் அணியை தலைசிறந்த அணியாக கொண்டு சென்ற முன்னாள் வீரர்கள் கூட, தேசிய கிரிக்கெட் தொடர்பில் அவதானம் செலுத்தாமை குறித்தும் விளையாட்டு ஊடகவியலாளர் அப்துல் ரகுமான், கருத்து தெரிவித்தார்.



“முத்தையா முரளிதரன் ‘இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கினால் கூட சில வேளை நான் வெற்றி பெறுவேன். ஆனால், இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் நடைபெறும் தேர்தலில் நான் ஜென்மத்திலும் வெற்றி பெற மாட்டேன்’ என்று மிக அழகாக அதனை சொல்லியுள்ளார். ஏனென்றால், இலங்கை கிரிக்கெட்டில் அவ்வளவு அரசியல் காணப்படுகின்றது,” என்கிறார் அப்துல் ரகுமான்.

மேலும், “ஒரே தரப்பினர் மாறிமாறி ஆசனங்களை பெற்றுக்கொள்வது போன்ற விடயங்கள் காணப்படுகின்றன. இதனால் இலங்கை அணியின் எதிர்காலம் பாதிக்கப்படுகின்றது. இலங்கை வீரர்களுக்கு சுதந்திரமாக செயற்படுவதற்கு வாய்ப்புகள் இல்லை. இப்படி இருந்தால், இலங்கை அணியின் எதிர்காலம் எப்படி ஒளிமயமாகும் என்ற கேள்வி என்னுள் எழுகின்றது,” என்கிறார் அவர்.

மாறாக, இந்திய கிரிக்கெட் வாரியத்தை எடுத்துக் கொண்டால், ராகுல் டிராவிட் இப்போது பயிற்றுவிப்பாளராக செயற்படுகின்றார். பழைய வீரர்களின் முழுமையான ஒத்துழைப்பு அடிமட்டத்திலிருந்து அவருக்கு காணப்படுகின்றது, என்கிறார்.

“இந்திய தேசிய அணியை ஒரு பக்கம் வையுங்கள். இந்தியாவின் ஏ, பி, சி அணிகளும் முழுமையாக பயிற்சிகளில் இருக்கின்றார்கள். இந்தியாவின் சி அணி உலகக் கோப்பை போட்டிகளில் தற்போது களமிறங்கினால், தற்போது உலகக் கோப்பை போட்டிகளை எதிர்கொள்ளும் பல அணிகளை வெற்றிகொள்ளும் அளவிற்கு இந்தியாவின் கிரிக்கெட் தற்போது காணப்படுகின்றது. அந்தளவிற்கு ஒருமித்து செயற்படக்கூடிய அளவிற்கு இந்திய அணி காணப்படுகின்றது. காரணம், வீரர்களுக்கான சுதந்திரம் அங்கு காணப்படுகின்றது,” என்கிறார் அவர்.

இலங்கையைப் போலவே பாகிஸ்தானிலும் இதே பிரச்னை காணப்படுகின்றது என்கிறார் அவர். “பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் அணியிடம் தோல்வி அடைந்தது. இதையடுத்து, பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்திற்குள் அரசியல் தலையீடுகள் காணப்படுவதாக பாகிஸ்தான் ஊடகங்கள் தெளிவாக கூறுகின்றன. அதே நிலைமையை தான் இலங்கை அணி தற்போது எதிர்கொண்டுள்ளது,” என அவர் கூறினார்.



**‘திறமைக்கு மதிப்பு இல்லை’**

இந்த அரசியல் பிரச்னைகளுக்கு மேலாக, இலங்கை அணியில் அனுபவம் வாய்ந்த வீரர்கள் இல்லாமையே, இலங்கை அணி தோல்விகளை சந்திப்பதற்கு பிரதான காரணம் என விளையாட்டு ஊடகவியலாளர் அப்துல் ரகுமான் தெரிவிக்கின்றார்.



“ஏஞ்சலோ மேத்யூஸ் இலங்கை கிரிக்கெட் அணியில் கட்டாயம் இருக்க வேண்டிய ஒரு வீரர். அவரைச் சேர்த்துக்கொள்ளவில்லை. ஆனால், அண்மையில் அவர் இணைத்துக்கொள்ளப்பட்ட போட்டியில் திறமையாகச் செயல்பட்டார். அன்று இலங்கை அணிக்கு வெற்றி கிடைத்தது. இவ்வாறான குறைகளை இலங்கை கிரிக்கெட் நிவர்த்தி செய்யாத வரையில், இலங்கை கிரிக்கெட்டின் எதிர்காலம் சந்தேகத்திற்குரியதுதான்,” என அவர் கூறினார்.

**உலகக்கோப்பையில் கேள்விக்குறியான நிலை**

உலகக்கோப்பைத் தொடரில் இலங்கை அணி 7 போட்டிகளை எதிர்கொண்டு, இரண்டு போட்டிகளில் மாத்திரமே வெற்றி பெற்றுள்ளது.

நெதர்லாந்து மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டு போட்டிகளில் மாத்திரமே இலங்கை அணி வெற்றி பெற்றுள்ளது.

பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, ஆஸ்திரேலியா, ஆப்கானிஸ்தான், இந்தியா ஆகிய ஐந்து அணிகளுக்கு எதிராக இலங்கை அணி தோல்வியை தழுவியிருக்கிறது.

இந்நிலையில், இலங்கை அணிக்கு இன்னும் 2 போட்டிகள் மட்டுமே எஞ்சியுள்ளன.

பங்களதேஷ் மற்றும் நியூஸிலாந்து ஆகிய அணிகளுடன் இலங்கை அணி மோதவுள்ளது.

வியாழனன்று (நவம்பர் 2) இந்திய அணியுடனான படுதோல்விக்குப்பின் இலங்கை அணி அரையிறுதிப் போட்டிக்குச் செல்வது மிகப்பெரிய கேள்விக்குறியாகியிருக்கிறது.

**இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சர் என்ன சொல்கிறார்?**

இலங்கை கிரிக்கெட் அமைப்பிற்குள் அரசியல் ரீதியில் தலையீடுகள் காணப்படுவதாக முன்வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை என விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கு ஐ.சி.சி அனுப்பியிருந்த கடிதத்திற்கு பதிலளித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டிருந்தார்.

ஐ.சி.சியின் நற்பெயரை முன்னிலைப்படுத்தி, இலங்கை கிரிக்கெட் அமைப்பிலுள்ள ஊழல் அதிகாரிகள், தொடர்ந்தும் முறைகேடுகளில் ஈடுபட்டு வருவதாக அமைச்சர் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகாரிகளினால் முன்னெடுக்கப்படுவதாக கூறப்படும் நிதி மோசடிகள், அதிகார துஷ்பிரயோகங்கள் மற்றும் சட்டவிரோத கொடுக்கல் வாங்கல்கள் போன்றவை, கணக்காய்வு அறிக்கை ஊடாக முன்வைக்கப்பட்டுள்ளது என சுட்டிக் காட்டியுள்ள அமைச்சர், அதன் பிரதிகளையும் ஐ.சி.சிக்கு அனுப்பி வைத்துள்ளதாக உள்ளூர் ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.